செந்தமிழ்



தொகுதி - 72 டிசம்பர் 1978 பகுதி - 4

மதுரைத் தமிழ்ச் சங்க இதழ்

ஆசிரியர் :

டி. பி எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

பேராசிரியர் டாக்டர். சுப. அண்ணாமலை, எம். ஏ., பி. எச்டி.,
முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை-62500

பேராசிரியர் டாக்டர். கோ. விஜயவேணுகோபாலன், எம்.ஏ., பி.எச்டி
மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை-625021.

பேராசிரியர் பழனி. அரங்கசாமி, எம். ஏ., பி. ஓ. எல்.,
அஞ்சல் வழிக் கல்வித்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்,
மதுரை-6250-1.

உரையாசிரியர் புலவர். இரா. இளங்குமரன்,
தமிழாசிரியர், மு. மு. உயர்நிலைப்பள்ளி,
திருநகர், மதுரை-625006.

ஆசிரியரும் வெளியிடுபவரும் :

டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 625001.

முகவரி :

ஆசிரியர்,
— செந்தமிழ் —
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
54, தமிழ்ச் சங்கச்சாலை, மதுரை-1.

முன்னுரை :

இலக்கிய அன்பர்கட்கும், தமிழ்த்தொண்டர்களுக்கும் செந்தமிழின் உளமார்ந்த வாழ்த்துகள் உரியன.

வழக்கமான இலக்கியக் கட்டுரைகளேயன்றி, செய்திக்கதிர் போன்ற புதிய பகுதிகளோடு கடந்த இரண்டு இதழ்களும் வெளிவந்தமையைப் பற்பலர் உளமாரப் பாராட்டியிருக்கின்றனர். தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு போன்றவற்றை உள்ளடக்கிய பொதுச்செய்திகள் தொடர்ந்து வெளிவரும்.

மதுரையில் நீதிபதியாகப் பணியாற்றும் தமிழன்பரின் வேண்டுகோளுக்கிணங்க, தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்சில பழைய கட்டுரைகள் செந்தமிழில் இனி இடம் பெறும். நுணுகிய கல்வியறிவும், ஆழ்ந்த சிந்தனையும் பெற்றுத் தமிழறிஞராக விளங்கிய ரா. இராகவ அய்யங்காரின் 'நிகண்டுகள்' என்ற கட்டுரை இவ்விதழில் வெளி வருகிறது.

'நூன் மதிப்புரை' என்ற பகுதியில் நூலாசிரியரின் பெயர், முகவரி என்றின்ன வெறுஞ் செய்திகள் மட்டும் வெளி வருவதுண்டு. அப்படியின்றி நூல் முழுதும் ஊன்றிப் படிக்கப்பட்ட பின்னர் காய்தல், உவத்தலின்றிக் குணம் நாடிக் குற்றமும் நாடியே கருத்துகள் இத் தலைப்பின்கீழ் சுருங்கிய அளவில் தரப்படுகின்றன. மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் அன்பு கூர்ந்து இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டுகிறோம்.

செய்திப்பத்திரிகை படிப்போர் இந்தியாவில் ஆயிரத்துக்குப் பதினன்குபேர் என்று ஐக்கிய நாட்டுக் கல்வி நிறுவனத்தின் குறிப் பொன்று கூறுகிறது. எனவே இலக்கண-இலக்கியத்துக்காக மட்டும் நடத்தப்பெறும் இதழ்கள் மிகவும் குறைந்த அளவிலே வெளியாகின்றன என்று சொல்லத் தேவையில்லை. இந்நிலையினை மாற்றிச் 'செந்தமிழ்' இதழுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டிய கடப்பாடு தமிழ்ச் செல்வர்களுடையதாகும். இந்தப் பெருநம்பிக்கையின் அடிப்படையில், விரைவில் இரண்டு திங்களுக்கொருமுறையாகச் செந்தமிழை வெளிக் கொணரும் பேராவல் உடையேம்.

உயர்பள்ளி-கல்லூரி நூலகங்களும், தமிழாசிரியர்களும், தமிழ்த்தொண்டர்களும், அன்பர்களும் இப் பேராவலை நடைமுறைக்குக் கொண்டு வர இயன்ற உதவியினைச் செய்ய வேண்டுகிறோம். வணக்கம்.

ஆசிரியர்

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	சேது மன்னரின் செந்தமிழ்த் திறம்	1
2.	மேனாட்டு நாகரீகமும் இந்திய நாகரீகமும் கவிராஜ பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்	2
3.	ஈன்றாள் பசி புலவர். தெ. முருகசாமி, B. O. L.,	7
4.	இலக்கியத்தில் கொடிகள் K. சின்னப்பா, M. A.,	10
5.	சங்க இலக்கிய நோக்கில் மூதின் முல்லை வே. ச. திருமாவளவன், M.A., M.O.L., B.Ed.,	16
6.	ஸ்ரீமான். பி. பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் மதுர பாஸ்கரதாஸ்	23
7.	நிகண்டுகள் முதுபெரும் புலவர் ரா. ராகவ ஐயங்கார்	25
8.	எழுத்துச் சீர்திருத்தம் தேவையா ? டி. பி. எம். பெரியசுவாமி, M. L. A.,	36
9.	நூல் மதிப்புரை பழனி. அரங்கசாமி, M. A., B. O, L.,	38
10.	செய்திக் கதிர்	41

சேது மன்னரின் செந்தமிழ்த் திறம்

1. செந்தமிழுக்கும் சேது நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களுக்கு இணையாக நான்காம் தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் புரந்த பெருமை அம் மரபினரையே சாரும். பேரும் புகழும் பெற்ற சேது நாட்டுப் புலவர்கள் பலர். அவர்களேயன்றி மன்னர்கள் பலரும் பாடல் புனை-வதில் வல்லவராயிருந்தனர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் மேன்மை தங்கிய மன்னர் முத்துராமலிங்க சேதுபதிகள் அவர்கள். அன்னார் அவ்வப்போழ்து தம் அரசவைப் புலவர்களுடன் புலமையைப் பகிர்ந்து கொள்வதில் பெருவிருப்புடையவராயிருந்தார்கள் என்பதை அவர்கள் பாடிய பாடல்கள் சில நமக்கு உணர்த்துகின்றன. அவை அனைத்தையும் தமிழ் அன்பர்களுக்குத் தரமுடியவில்லையாயினும், அவரது புலமைக்கு உரைகல்லாய் அமைந்திருக்கும் ஒரு சில பாடல்களையேனும் 'செந்தமிழ்' இதழில் வெளியிடவிருக்கின்றோம். அவற்றைத் தமிழ் அன்பர்கள் கற்று இன்புறுவார்களாக.

வினா-விடைப் பகுதிகள்

மன்னர் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் வினாவிற்குச் சேது அரசவைப் புலவர் தசாவதானி சரவணப் பெருமாட் கவிராயர் விடை.

"நஞ்சுடைய கண்டத்து நாதன் முடிமீது
குஞ்சுமதி யணிந்து கொள்வானேன்-அஞ்சாமன்
மூத்தபிள்ளை யன்றுமுறித்த கொம்பைக் கேட்குமென்று
சேர்த்துவைத்துக் கொண்ட திறம்."

அரசவைப் புலவர் சரவணப் பெருமாட் கவிராயர் வினாவிற்குச் மன்னரின் விடை.

"தன்றம்பி பெண்டிரண்டைச் சார்ந்திருந்தான் றந்திமுகன்
மன்றலின்னஞ் செய்யாதென் மன்னவா - வென்று
மிருகொம்புடை யானையில்லை யென்றார் சொன்ன
ரொருகொம்பு கையி லுளது."

[கொம்பு — பெண்]

(இன்னும் வரும்)

மேனாட்டு நாகரிகமும் இந்திய நாகரிகமும்

கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்
(நாகர்கோவில்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பணம், காசு, பொன் என்பன இந்தியர்களது நாணயங்களாக வழங்கி வந்திருக்கின்றன. அந்நாணயங்களுக்கு அச்சு முகப்பும் இருந்ததாக அறிகின்றோம். இத்துணைப் பொன் என்று பொருள்கட்கு விலை யிடும் வழக்கம் இருந்தமை பண்டைய நூல்களால் புலப்படுவதனால், பொன் என்பதும் ஓர் நாணயமாக வழங்கிற்று என்பது அறியலாம். இப்பொழுது இலங்கையில் வழங்கும் 'வெள்ளி' என்னும் நாணயப் பெயரும் உலோகப் பொதுப் பெயர் வழங்குவது ஆராயற்பாலது. வடபாரதத்தோர் பணம் 'ஸோநம்' (பொன்) என்னும் நாணயங்களை வழங்கி வந்ததாகத் தெரிகிறது. பிற்காலத்து, இந்தியாவிற் குடியேறிய அரசர் சிலர் தோலில் 'நாணயங்'களை வெளியிடும் வழக்கம் உலோகச் செல்வங்களின் குறைபாடு பற்றியாதல் இந்தியச் செல்வங்களைக் கவர வேண்டும் என்பது பற்றியாதல் ஏற்பட்டிருக்க வேண்டும். நாணயத் தொழிலை இந்தியர் அறிந்திலர் என்பதற்குத் தோல் 'நாணயங்கள்' சான்றுகள் ஆகா.

இந்தியர் இவ்வகை மண்ணில் இவ்வகைப் பொருள் விளையும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள். மண்ணில் நின்றும் உலோகங்களையும் பல இரசப் பொருள்களையும் மண்கரியையும் பலவகை உயர்தரக் கற்களையும் பிறவற்றையும் கல்லி எடுத்திருக்கின்றனர். அவர்கள் ஒன்பது வகை உலோகங்களையும் இரசம் முதலிய பொருள்களையும் பலவாறு பயன்படுத்தியிருக்கின்றனர் என்பது வெளிப்படை.

முற்காலத்து, இந்தியருடைய பொது வாகனங்கள் பலவகை மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் தேர்களும் பல்லக்கு முதலிய நரவாகனங்களும் பலவகை மரக்கலங்களுமாம். ஆகாயத்திற் பறந்து செல்லும் மயில்வாகன முதலியனவும் இந்தியாவில் அருகி வழங்கின. உதயணன் காதை, சீவக சிந்தாமணி முதலிய நூல்கள் அவ்வகை ஆகாய வாகனங்களைப் பற்றிக் கூறுகின்றன. 'புட்பக விமானம்' என்பது தெய்வ விமானம் எனவும் அதை அடியீடாகக் கொண்டு தாமே இயங்கும் ஆகாய விமானங்கள் இந்தியாவில் இருந்தனவெனவுங் கூறுதல் புனைந்துரையேயாம்.

மேனாட்டார் இணைவண்டி (cycle) இயந்திர வண்டிகள் (மோட்டார், இரயில் முதலியன) கப்பல், இயந்திரக் கப்பல், நீர் நுழை கப்பல், ஆகாய விமானம் முதலிய பலவகை வாகனங்களைக் கண்டு, உலகிற்குப் பெரும் பயனுற்றி வருகின்றனர். மேனாட்டாரது தரை வாகன (நிலவூர்தி) வடிவும் மரக்கலங்களின் வடிவும் இந்தியருடைய அவ்விரு வாகனங்களின் வடிவுகளையே ஒத்திருக்கின்றன. கப்பல்களின் அடியுறுப்பை மீன் வடிவிற் செய்தவர்கள் முதன் முதலாக இந்தியர்களே ஆவர்.

காந்தத்தின் ஆற்றலையும் ஒளிவன்மையையும் விரைவின் வன்மையையும் அணுக்களின் வலிமையையும் பற்றி இந்தியர் அறிந்திருந்தனராயினும், மின்சார வன்மையைப் பற்றி அவர்கள் விரிவாக அறிந்திருந்தனர் என்பதற்குத் தெளிவான சான்றுகள் இல்லை. மேனாட்டவர் மின்சாரத்தைப் பலவகையில் பயன்படுத்தி வருகின்றனர். ஒளியலைகளைக் குறித்த இடத்திற் பரவச் செய்து ஓரிடத்துப் பொருளின் வடிவைப் பிறிதோரிடத்தில் காட்டவும், ஒலியலைகளைத் தூண்டி ஓரிடத்து ஒலியைப் பிறிதிடத்திற் சேர்ப்பிக்கவும் வண்டிகளை இயக்கவும் வெளிச்சத்தைப் பயக்கவும் வெம்மையை உண்டாக்கவும் வேறுபல தொழில்களைச் செய்யவும் மின்சாரம் பயன்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

* நிலக் கவர்ச்சியாற்றலைக் குறித்து இந்தியர் நன்கு அறிந்திருந்தனர். யோகம், தவம் முதலியவற்றைச் செய்யும்பொழுது நிலத்திற் பலகையிட்டு அதன்மேல் தோலும் அதன்மேல் வெண்பட்டும் விரித்து அப் பட்டின்மேல் இருக்க வேண்டும் எனவும் அன்றேல் நிலம் யோக தவங்களால் வரும் ஆற்றலைக் கவரும் எனவும் இந்திய நூல்கள் கூறுகின்றன. உண்ணும்பொழுதும் ஏதேனும் இருக்கைகளில் இருக்க வேண்டும் எனவும் ஒரு கையூன்றி உண்ணலாகாது எனவும் நோயாளிகள் வெறுநிலத்தில் படுக்கலாகாது எனவும் கூறுவதும் அக்கருத்துப் பற்றியே யாம். பருப் பொருட்களையன்றி நுண் பொருட்களையுங் கவரும் ஆற்றல் நிலத்திற்கு உண்டு என்பதை இந்தியர் அறிந்திருக்கின்றனர்.

இதுகாறுங் கூறியவற்றால் இந்தியர் கண்டுபிடித்த பல உண்மைகளையும் பொருள்களையும் மேனாட்டார் வளப்படுத்தியுள்ளனர் என்பதும் இந்தியர் கண்டுபிடிக்காத பல உண்மைகளையும் பொருள்களையும் அவர் கண்டுபிடித்தனர் என்பதும் மேனாட்டார் காணாத பல உண்மைகளை இந்தியர் கண்டனர் என்பதும் பெறப்படும்.

* cyravitation

மேனாட்டார் உலகியற் பொதுத்தொழில்கள் பலவற்றையும் இயந்திரங்களால் நிகழ்த்தி வருகின்றனர். அவரது வாழ்வு இயந்திர வாழ்வு என்று கூறத்தக்கதாயிற்று. இயந்திரங்கள் இன்றி வாழ இயலாத நிலைமையை அவர் வருவித்துக் கொண்டனர். இந்தியர்கட்கு இயந்திரங்கள் இல்லாது எப்பொழுதும் வாழமுடியும். அத் தன்மையை இந்தியர் எல்லாவற்றுக்கும் இயந்திரங்களையே எதிர்நோக்கி இழந்து வருகின்றனர்.

மேனாட்டார் சிறந்த நாகரிகமுடையவர் என்று சிலர் கருதுகின்றனர். 'நாகரிகம்' என்பதற்குப் பலவகைப் பொருள்கள் கூறப்படுகின்றன. சிறப்பு, புதுமை, சீர்திருத்தம் என்பனஅதற்குரிய பொருள்களாகக் கொள்வதுண்டு. 'நாகரிகம்' என்னுஞ் சொற்கு 'நகரத்தொடர்பானது' என்பது காரணப் பொருள். காரணப் பெயர்கள் அக் காரணம் பற்றி வருங் காரியங்களுக்கும் வழங்கப்படுவது இயல்பு. வியப்பு, அதிசயம் என்பவற்றுக்கு 'மிகுதி' என்பது பொருளாயினும், உள்ளம் மிகுதியாக ஊன்றி நிற்பதால் உண்டாகுஞ் சிறப்பு நிலைக்கும் அவை பெயர்களாக வழங்குகின்றன. எனவே, நாகரிகம் என்பதற்கும் மேற்கூறிய பொருள்கள் வழங்குவன ஆயின. பரிமேலழகர், நாகரிகத்துக்குக் கண்ணோட்டமென்று பொருள் கூறுவர். கண்ணோட்டம் என்பது பிறர்துன்பங் கண்டவிடத்து அதனை நீக்குவதற்கு உரிய மனநெகிழ்ச்சி (இரக்கம்) இப்பொருள் உலகியல் வழக்கன்று. நிலத்தைச் சீர்திருத்தி மக்கள் செவ்விதின் உறைவதற்கு உரிய இடம் நகரமாகையால், நாகரிகம் என்பதற்குச் சீர்திருத்தம் என்னும் பொருள் உலகவழக்கிற் சிறந்து காட்டுவதாம்.

உண்மைச் சீர்திருத்தம் உள்ளத்தில் உண்டாக வேண்டும். உள்ளம் திருந்தின் சொல்லுஞ் செய்கையுந்திருந்தும். பொதுநலநாடல், தூய்மையுறல், நல்லெண்ணம், உயர்நோக்கம், அன்பு, பொறுமை முதலிய சிறந்த குணம் என்பவற்றால் உள்ளச் சீர்திருத்தம் உண்டாம். உள்ளச் சீர்திருத்தம் பெற்றவர்களே நாகரிகமுடையவராவர். மேனாட்டார் வகைவகையான ஆடைகளை அணிகின்றனர். பல்வகை யுணவுகளை உண்கின்றனர்; பல்வகைக் கைத்தொழில்களைச்செய்கின்றனர்; இயந்திரங்களையும் புதுப்பொருள்களையும் ஆக்குகின்றனர், இவை அனைத்தும் நாகரிகம்என்று கொள்ளவியலாது. இவற்றுள் உள்ளச் சீர்திருத்தத்தின் அளவை உணரவேண்டும். மேனாட்டாரது ஒழுக்க வழக்கங்களும் செய்கைகளும் உண்ணலத்துக்கு எடுத்துக் காட்டுக்களல்லவாகையால், அவர்கள் நாகரிகமுடையார்

என்று கொள்வது எங்ஙனம்? அவருடைய கலையுணர்ச்சியும் ஆராய்ச்சியும் உழைக்கும் இயல்பையும் அறிவையுங் காட்டுமேயன்றி நாகரிகத்தைக் காட்டா.

உண்மை நாகரிகம் உள்ளத்தில் பிறக்க வேண்டும். உள்ளம் பண்படல் வேண்டும், செப்பம் உறவேண்டும், பெருந்தன்மையும் தெய்வப் பான்மையும் உள்ளத்தில் நிலைகொள்ளவேண்டும். உயர்ந்த ஆடை உடுத்து உயர்வாகனத்திற் செல்லும் ஒருவனே நாகரிகன் என்றால், அறிவிலிகளும் கயவரும் நாகரிகர் ஆவர்.

உள்ளம் சீர்திருந்தின் உலகியலறிவும் ஒப்புரவாண்மையும் அமைதியும் பண்பாடும் உண்டாம். இந்தியர்களது உள்ளம் மேனாட்டாரது உள்ளத்தினும்விடச் சீர்திருத்தம் பெற்றது என்பது இக்காலத்திலும் மறுக்கப்படாத உண்மை. இந்தியர் தூய்மையும் அன்பும் நல்லெண்ணமும் பண்பாடும் ஒப்புரவும் பிற சிறந்த குணங்களும் உடையவராவர். இவை மேனாட்டாரிடத்து அருகும். தீமையை விளைக்கும் ஒழுக்கவழக்கங்களை நாகரிகத்துக்கு அறிகுறியாகக் கொள்வது வழுவாம். செல்வ வாழ்க்கை மயக்க வாழ்வாவது அன்றி நாகரிக வாழ்வாகாது.

இந்தியர்கள் மனநலத்தாலும் மேனாட்டவர் தொழில் மிகுதியாலும் விளங்குகின்றனர். இவருள் மனநலமுடைய இந்தியரே உண்மை நாகரிகமுடையவராவர். மேனாட்டார் நாகரிகர் என்பது, நாகரிகம் என்னும் சொல்லின் காரணப் பொருள்பற்றி உண்மையாகக் கூடும்.

இந்தியர் தமக்கு ஒவ்வாத ஒழுக்க வழக்கங்களை மேனாட்டாரிடமிருந்து கற்று நாகரிகத்தை இழந்து வரத் தலைப்படுகின்றனர். மேனாட்டார் உலக நீதியையும் பொதுமக்கள் நலத்தையும் பாராட்டாது செல்வம், அதிகாரம் முதலியவற்றை வேண்டி மென்மேலும் மனநலத்தில் இழிவுற்று வருகின்றனர்.

மேனாட்டார் மாட்டு உள்ள ஊக்கத்தையும் முயற்சியையும் இந்தியர் பெறல் வேண்டும். மேனாட்டாரிடத்துள்ள தீயவழக்கங்களை மட்டும் கற்றுக் கொள்வதில் இந்தியர் விருப்புடையராகக் காணப்படுவது இந்தியா செய்த பாவவினைபோலும்! முயற்சியும் ஊக்கமும் உயர்நிலை பெறும் நோக்கமும் மேனாட்டார்க்கு அமைந்திருப்பதனால், அவர்கள் மனநலம் நன்கு உடையவராயின், உலகிலேயே சிறந்த

நாகரிகமுடையவராக விளங்குவர். அம் மனநலம் அவர்களுக்கு வாய்ப்பது அரிது என்னுமாறு அவர்களது உள்ளம் ஆசைத் துடிப்பு ஏறி அழுக்குற்றுளது. இந்தியருடைய உள்ளமைதி மேனாட்டார்க்கு உண்டாக வேண்டுமாயின், அவர்கள் இந்தியர்களுடைய மனப் பண்பைப் பின்பற்றல் வேண்டும்.

இந்தியரும் மேனாட்டவரும் மனப் பண்பாடு சிறக்கும் வண்ணம் ஒருவரையொருவர் பின்பற்றி வாழ்வது இருபாலார்க்கும் நன்மை பயப்பதாகும். இந்தியரது அகவாழ்வை மேனாட்டவர் அடைய வேண்டும். மேனாட்டாரது புற வாழ்விற் சிறந்த பகுதியை இந்தியர் பெறவேண்டும். இவ்வண்ணம் அகமும் புறமும் இரு பாலாரிடத்துந் தகுதியுறக் கலக்குமாயின்,எதிர்கால உலகம் மிகுந்த அமைதிவாழ்வைப் பெற்று இன்பத்தை நுகரும்; இந்நாளிற் காணப்பெறும் புரட்சிகளும் போர்களும் நிகழமாட்டா; உலகின் இப்போதைய அச்சநிலை அகலும். புரட்சிகட்கும் போர்கட்கும் அமைதியற்ற வாழ்க்கைக்கும் மேனாட்டவரது ஆசைக்கொழுப்பும் அடுதொழிலுமே காரணமாம். இக்கால அச்ச நிலைக்கு மேனாட்டாரே தகுந்த காரணராவர். இந்தியர்கள் உலகவமைதி நிலையின்மைலவிற்கு எவ்வகையிலும் ஏதுவானதில்லை.

இந்தியாவில் நிகழும் சில புரட்சிகளுக்கும் மேனாட்டார் இயற்றிய சில நூல்களும் அவர்தங் கொள்கைகளும் தூண்டுதல்களுமே காரணங்களாம். இயல்பாக, இந்தியர் அமைதிவாழ்வில் நோக்கமுடையவர் என்பதற்கு நூல்களும் அனுபவங்களுஞ் சான்றுகளாம். இந்தியர்கள் அமைதிவாழ்வையே மென்மேலும் நாடவேண்டும். புரட்சிவாழ்வு இறுதியில் தோல்வியையுந் துன்பத்தையுந் தருவது என்பதை உணரல் வேண்டும். இன்று இந்தியர் உரிமை பெற்று இலகுவது அவரது பொறுமை வாழ்வின் பயனேயாம். மேலும், அப்பொறுமை வாழ்வே இந்தியர்க்கு இகபரங்களை ஒருங்கு ஆளும் நனி சிறப்பை அளிக்கும் என்க.

"ஈன்ருள் பசி"

புலவர் தெ. முருகசாமி. பி. ஓ எல்.,
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி-1

"ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை" —656 குறள்.

இக் குறட்பாவிற்குப் பரிமேலழகர் "தன்னைப் பயந்தாளது பசியை வறுமையால் கண்டு இரங்கும் தன்மையனாயினன் எனினும் அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவர் செய்யா-தொழிக"—என்று உரை எழுதினர். இவ்வுரையைப் போலவே மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் போன்ருேரும் உரை செய்தனர்,

தன்னைப் பயந்தாளது பசி என்ருல் தன்னைப் பெற்றெடுத்த தாயினது பசி என்பது பொருள். இவ்வுரைப்பொருளுக்கு மாருகச் சிலர் இந்நாளில் புதியது என அவர்கள் கருதுகின்ற உரை ஒன்றைக் கூறிவருகின்ருர்கள்.

ஈன்ருள் பசி காண்பானாயினும் என்ருல் 'ஈன்ற அணிமை-யையுடைய தாய் பசித்திருக்கக் காண்பானானாலும்' என்று பொருள் கூறுகின்றனர். இங்ஙனம் ஈன்ற அணிமையுடைய தாய் எனக் கூறக் காரணம் என்னைஎனின் 'ஈன்ற அணிமையுடைய தாய்க்-குத்தான் பசி மிகுதியாக இருக்கும்; எனவே மகவை ஈன்ற நேரத்தில் அத் தாய் அடையும் பசி ஏனைய பொழுதினும் மிகுதியுடைய-தென்பதால் அங்ஙனம் புதிய உரை கூறுவதே சாலும் என வாதிடு-கின்றனர்.

இவ்வாறு பொருள் கொள்வது முற்றிலும் தவறுடையதாகும், இங்ஙனம் பொருள் கொண்டால், அத் திருக்குறளின் உயிர்ப்புப் பொருள் சிதைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

ஈன்ற அணிமையுடைய தாய் மிகுந்த பசியைப் பெறுவதென்பது இயல்பு. மகவினை ஈன்ற அந்த நேரத்தில் அப் பசியை ஒருபொருட்-டாகக் கருதாமல், அதை இயல்பாகப் பொறுத்துக் கொணடிருப்ப-தென்பதுதான் மகளிர்க்கு இயல்பு. இவ்வியல்பைச் செல்வமுடைய ஒருத்தியாக இருந்தாலும், செல்வமில்லாத ஏழைக் குடும்பத்தவளாக இருந்தாலும் பெறுவதென்பது பொதுத்தன்மை. எனவே ஈன்ற அணிமையுடைய ஒரு தாயின் பசியைக் கொடுமைக்குரிய— அதாவது காணுதற்கரிய பசி என்பதாகக் கூறமுடியாது; அங்ஙனம் உலகில் எவரும் கருதார்.

குழந்தையைப் பெற்ற சில நாட்களுக்கு அத் தாய் வயிறுநிறைய உண்ணமாட்டாள். உண்ண வேண்டுமென்ற வேட்கை மிகுவ-தாயினும், மிகுதியும் உண்ண அவளது உடற்கூறு அப்போது இடந்-தராது. இஃது உலகியல் உண்மை. எனவே, ஓரளவு பசித்த நிலை-யிலேயே சிலநாள் இருப்பாள். செல்வப் பெண்ணுயிருப்பினும் அப் பசியை வேண்டி விரும்பித் தீர்த்துக் கொள்வதென்பது அரிது. எனவே ஈன்றணிமைக் காலத்தில் இயல்பாகவே அடையும் பசித் துன்பம் பிறபொழுது - அதாவது உணவு இல்லாமல் வருந்தும் போது உண்டாகும் பசித்துன்பத்தைப் போன்ற கொடுமையுடைய தன்று என்பது முற்றிலும் உண்மை. அதாவது, மகவினை ஈன்ற சில நாள் வரை அத் தாய் தன்பசியைப் பெற்றேதீர வேண்டும் என்பது இயல்பாதலால் 'ஈன்ருள்' எனும் சொல்லுக்கு ஈன்றணிமையுடையதாய் என்று புத்துரை கூறுவது பொருந்தாது.

ஒருவற்குத் தாயினும் சிறந்த ஒன்று உலகில் இல்லை. தான் பட்டினி கிடந்தாயினும் தன் மகவைக் காக்கும் நற்பண்புடையவளே சிறந்த தாயே யாவாள். அங்ஙனம் தன்னை வளர்த்த தாயைக் காக்கும் பொறுப்பு, பிற்றை நாளில் மகனுக்கு ஏற்படுகின்றது. குடும்பப் பொறுப்பில் வறுமையை ஒருவன் அடையக்கூடாது என்ருலும், வாழ்வில் வறுமை வந்து குறுக்கிடாது என்று அறுதியிட்டுச் சொல்ல இயலாதெனவே, ஒருவனது குடும்பம் தாய் முதலாகப் பலரும் பட்டினி கிடக்கும் அளவிற்கு வறுமையடைகிறது என்று வைத்துக் கொள்-வோம். அந் நிலையில் சான்ரோர் பழிக்கும் தீய காரியத்தைச் செய்து பொருளீட்டித் தன் குடும்பத்தின் வறுமையைப் போக்கிக்கொள்ள முடியும். ஆனல் அது அவனுக்குச் சிறப்பைத் தராது. ஏனெனில், நெடிதுநாள் நின்று வருத்தும் பழித் துன்பத்தைக் காட்டிலும் சிறிது பொழுதே நின்று வருத்தும் வறுமையில், தாயின் பசித் துன்பத்தையும் பொறுத்தல் என்பது ஓர் அரிய செயல் அல்ல.

எனவே மற்றவரைக் காட்டிலும் தன்னைப் பெற்றவள் பசித்-திருக்கக் காண்பதென்பது பெரும்பாவமாதலின், அங்ஙனமாகிய பெரும்பாவத்தைத் தாய்வழிக் காண நேர்ந்தவிடத்தும்கூடச் சான்ரோர் பழிக்கும் தீச்செயலைச் செய்து அப் பசியினைப் போக்கக் கூடாது என்பதுதான் குறள் நெறி.

துன்பத்தில்தான் சோதனை மிகும். சோதனைகள் மிகுகின்ற துன்பக்காலத்தில்தான் மனிதனுக்கு மனத்திட்பம்வேண்டும். அம்மனத்-திட்பத்தின் வெற்றியே மானிடத்தின் வெற்றி. இதையே வேறுவகை-

யாகக் கூறினல், வறுமையில் செம்மை எனலாம். இந்த அடிப்படையில்-தான் "தாய் பசித்திருக்கக் காணும் வாழ்வுநிலையே தனக்கு வந்த-போதும், ஒருவன் அறிவுடையோர் பழிக்கும் வினைகளைச் செய்தல் கூடாது'' என்கிறது குறள்.

இக் கருத்தையே ஓர் எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம். ஒரு பெண் மகவீனுங் காலத்தில், அவளுக்கு உதவி புரியும் மருத்துவர் தாயோ அல்லது பிள்ளையோதான் பிழைக்கும் என்கிருர். இதைக் கேட்ட கணவன் குழந்தையும் மனைவியும் பிழைத்துவிட வேண்டும் என்ற எண்ணமுடையானுயினும், ஈண்டு இந்நிலையில் குழந்தையைக் காட்டிலும் தன் மனைவியே பிழைக்கவேண்டும் என்கிருன். குழந்தையை இழக்கும் துன்பத்தினும் மனைவியை இழக்கும் துன்பம் கொடியது என்பதால் அவன் அங்ஙனம் விரும்புவது இயல்பு. இதனுல் குழந்தையை இழக்க வேண்டும் என்பது அவன் நோக்கமன்று; இதுவா, அதுவா என்ற நிலை வந்துவிட்டபோது சேயை விடத் தாய் மேல் என்று அவன் எண்ணுகிருன்.

அதுபோன்றே ஒருவன் தானுற்ற வறுமையில் தாயின் பசித் துன்பத்தைக் காண்பதா? அன்றிச் சான்ருேர் பழிக்கும் செயலைச் செய்வதா? என்ற நிலை வரும்போது, தாயின் பசியைக் காண்பதைப் பொறுத்துக் கொண்டாலும் பொறுத்துக் கொள்ளலாம்; ஆனுல் சான்ருேர் பழிக்கும் வினைகளைச் செய்து அவைகளால வரும் தீமையைப் பொறுக்கமுடியாதென முடிவு செய்து தாயின் பசித் துன்பத்தைக் காண முற்படுகிருன். இதனுல் தாயின் பசியைக் காண வேண்டும் என்பது நோக்கமன்று; 'ஈன்ருள் பசி காண்பானுயினும் என்றபோதே 'தாய் பசித்திருக்கக் காண்பதென்பது ஒருவனுக்குக் கூடாதது' என்ற தொனிப் பொருளும் நன்கு தெரிகிறது.

சான்ருேர் பழிக்கும் வினையை எக் காலத்தும் செய்யாமலிருப்ப. தென்பதுதான் மானிட இயல்பு. ஆனுல் தனக்குத் துன்பம் வந்துற்ற-போது பழியான ஒன்றைச் செய்து, தன் துன்பத்தைப் போக்கிக் கொள்ள வாய்ப்பிருந்தும் அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமல், அதாவது அற்ப பொருளை விரும்பாமல் நீங்கும்போதுதான் ஒருவனை உலகம் இன்னுன் என்று அடையாளம் கண்டு கொள்கிறது. இதனுல் எந்தக் காலத்திலும் எச்சூழ்நிலையிலும் சான்ருேர் பழிக்கும் வினை-களைச் செய்யக் கூடாது என்பது திருவள்ளுவரின் உட்கருத்தாகும்.

இலக்கியத்தில் கொடிகள்

K, சின்னப்பா M. A.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

இன்பியல் துன்பியல் காட்சிகளை நயத்தோடு படம்பிடித்துக் காட்டுவர் இலக்கிய வல்லுநர். கற்பனை மாடமாளிகைகளிலும், கூடகோபுரங்களிலும், விண்ணை அளாவிப் பறக்கும் துகிற்கொடிகளை முன்வைத்து இந் நயம் எவ்வாறு காட்டப்படுகிறது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். ஈண்டு 'கொடி' என்ற சொல் கொடிபோன்ற மெல்லிடையாரையோ, மலர்களை முகிழ்க்கின்ற கொடிகளையோ, ஆரவாரம் மிக்க அரசியல்வாதிகளின் பட்டொளி வீசிப் பறக்கின்ற கொடிகளையோ குறிப்பிடவில்லை என்பது தெளிவு. ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர்தாம் 'கொடிநிலை'* என்ற பெயரில் இதனைக் குறிப்பிடுவர். கொடிநிலை என்பதற்கு உரையெழுதப் போந்த முதல் உரையாசிரியராகிய இளம்பூரணரும், உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரும் "குற்றம்தீர்ந்த சிறப்பினையுடைய கொடிநிலை, பாட்டுடைத்தலைமகனைச் சார்த்திவருங்காலத்துக் கடவுள் வாழ்த்தோடு பொருந்தி வரும்" என உரைத்தனர். உரை இன்னும் பலரது அறிவுக்குத் திரையாக இருக்குமோ? என ஐயுற்ற அவர்கள்,

> "பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
> பாம்புண் பறவைக் கொடிபோல — ஓங்குக
> பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
> கொல்யானை மன்னன் கொடி."
>
> (புறப். பாடாண் ௩௧)

என்றதொரு வெண்பாப் பாடலை விளக்கிக் காட்டினர். 'பாம்பையுண்ணும் பறவையாகிய கருடன் கார்மேக வண்ணன்-கண்ண பெருமானது கொடியாக இருந்து அச்சமின்றிப் பறப்பது போலப் பல மன்னர்களும் வந்து பணிவதால் மன்னுதி மன்னனாக விளங்கும் எனது வேந்தனது கொடியும் கருடக் கொடி போன்றே கருத்துக் கொண்டு பறக்கிறது' என்ற பொருளுடைய பாடலையே மேற்காட்டிப் போந்தனர். ஒவ்வொரு மன்னனும் அவரவர்களுக்கு விருப்பமானதோர் அடையாளக் கொடியைத் தங்களது நாட்டுக் கொடியாக வைத்திருந்தனர் என்பதை இதன்மூலம் அறியலாம்.

---

* கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.
(தொல். புறத். சூத், உஎ.)

சிலப்பதிகாரம் :

சங்க மருவிய காலத்ததென்று கருதப்படும் சிலப்பதிகாரத்தில் வில், கயல், புலி பொறித்த இலச்சினையும் கொடியும் இடம் பெறுகின்றன. கடைக்கண்ணின் கருணைப் பார்வையால் குஞ்சுகளுக்கு உணவூட்டுவது மீன்; கருணை மிகுந்த ஆட்சியால் குடிகளின் குறையகற்றுபவன் பாண்டியன். அவனது கொடிக்கு அழகூட்டுவது கயல். 'மீனக்கொடியோன்' எனச் சிறப்புப் பெயர் பெற்றவன் பாண்டியன் நெடுஞ்செழியன். அவனது தலைநகர் மாடமதில் சூழ் கூடல் நகர். அந் நன்னகரினுள் வாழ்தல்வேண்டிக் கருங்கயற்கண்ணி கண்ணகியும் குன்றாக்கொள்கைக் கோவலனும் புறஞ்சிறை மூதூர் புக்கனர். பார்த்த கயற்கொடி படபடத்தது. ஏசாச்சிறப்புடைய இசைவிளங்கு பெருங்குடி மாசாத்து வாணிகன் மகனே! கோவலனே! மாதரார் தொழுதேத்தும் பெருங் குணத்துக் காதலாளே! கண்ணகியே! கூடல்மா மன்னன் உங்களுக்குக் கொடுமை இழைத்துக் கூடாகப் போகிறான். நன்னகராகிய பொன்னகர் உங்களுக்குப் பொல்லாங்கு சொல்லிப் பொசுங்கப் போகிறது. உங்களது வல்வரவால் கொற்றவனோடு கொடியும் வீழப்போகிறது. உங்களை நல்வரவுகூறி வரவேற்க நான் தயாராக இல்லை. நீங்கள் வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்ப வருவதால் உங்களுக்கோ, மாசற்ற மதுரைக்கோ, மதுரையின் மதிலின் மீது நின்று இருந்து நேயமோடு ஆடும் எனக்கோ ஒரு நன்மையும் விளையப் போவதில்லை. எனவே வாராதீர்கள் வாராதீர்கள் என வழிமறித்துக் கைகாட்டுகிறது. கொள்கை மன்னனுக்கு அமைந்த குறையற்ற கொடி உணர்ச்சிவசப்பட்டுத் துடிப்பதை,

'போர் உழந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் வழிமறித்துக் கைகாட்ட'
(சிலம்பு. புறஞ்சேரி இறுத்த காதை: 189- 90)

எனக் காட்டுவது கவிஞனது கற்பனைத் திறன்.

இராம காதை:

'இனியொரு கம்பன் பிறப்பானோ, இப்படியும் கவி தருவானோ' என்றெல்லாம் போற்றிப் புகழப் பெற்ற ஒண்பாவில் உயர் கம்பன் தனது கற்பனைத் திறனை, கொடிகளின் மீது ஏற்றிக் காட்டுகிறான். பாலகாண்டத்து நாட்டுப் படலத்தில் கோசலை நாட்டு வளங்கூறும் போது கொடிகளின் கோலக் காட்சியினைக் காட்டுகிறான். முகிலோடு நெடுங்கொடித்துகில் மின்னிக் கொண்டிருக்கின்றது. அம் முகிலோடு

முண்டித்திரியும் வெண்ணிலா தேய்வது இக் கொடிகள் பட்டுப் பட்டு, தட்டித் தட்டித் துடைப்பதால்தான் என்பது கவிக்கூற்று. இம் மாடத்திடை ஆடும் கொடிகள் மீப்போய் வானாறு நண்ணி, புனல் வற்றிட நக்கிவிட்டதாம். கோசலை நாட்டுக் கொடி இக் கோலத்தினை மட்டுமே செய்யும். ஆனால் மைதிலியைத் தான் செய்த தவத்தின் காரணமாகப் பெற்ற மிதிலைக் கொடி தனது கைகளை நீட்டி நல்வரவுகூறி இராமனை வரவேற்கிறது. கோமுனியாகிய விசுவாமித்திரனோடும் தம்பி இலக்குவனோடும் இராமன் வந்துகொண்டிருக்கிறான். தாமரையில் தங்கித் தவம்செய்யும் இலக்குமி, நான் செய்த தவப்பயனால் எந் நாட்டிலே வந்து பிறந்து வளர்கிறாள். அவளுக்குப் பொருத்தமான கணவன் நீ தான் என்பதை நானறிவேன். இந்நாட்டிற்கு அதை அறிவிக்க வேண்டாமா? செங்கமலக்கண்ணா, என்னுடைய மணிபதித்த கைகளை நீட்டி அழைக்கின்றேன், விரைந்துவா; இரைந்துவா!' என ஆசையாக அழைக்கின்றன அங்குள்ள கொடிகள் ஒவ்வொன்றும்.

> "மையறு மலரின்நீங்கி, யான்செய்மா தவத்தின்வந்து
> 'செய்யவள் இருந்தாள்' என்றுசெழுமணிக் கொடிகள் எல்லாம்
> கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
> ஐயனை 'ஒல்லைவா' என்று அழைப்பது போன்றது அம்மா
>
> (மிதிலைக்காட்சிப் படலம்-எண் 1)

அம்மட்டோ! இரம்பையும், ஊர்வசியும், மேனகையும், திலோத்தமையும் மகிழ்ச்சி வந்த காலத்து எப்படி ஆடுவரோ, அதுபோன்று கொடிகளும் ஆடினவாம். அவ்வாறு ஆடுகின்ற ஆட்டத்தில் முகில் - குலம் பட்டுக் கொடிகள் நனைந்தன; அகிற்புகை பட்டுப் புலர்ந்தன. மிகுதியான எண்ணிக்கையுடைய கொடிகள் வானத்தைத் தொட்டுத் தொங்கிக் கொண்டிருந்தன. அவைகள் விசும்பு தோல் உரிந்து தொங்குவதைப் போன்று தோன்றியனவாம்.

கந்த புராணம் :

சிவாகமத்தை உயிர்ப் பொருளாகத் தழுவிய கச்சியப்பசிவாச்சாரியார் 11 - ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் வாழ்ந்தவர். பேணும் பொருளெல்லாம் சிவமாகப் பேணும் அவர், கச்சிமா நகர மதில்மீது பறக்கும் கொடியையும் அவ்வாறே காணத் தவறவில்லை. அந் நகரத்துப் பொன் மதிலின் மீது வெண் கொடிகள் கட்டப்பட்டிருந்தன; ஆகாயத்தில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. பிரமதேவன் முற்காலத்தில் அன்ன-

வுருக் கொண்டு சிவனது திருமுடியைக் காணச் சென்றது போல இப்போது கச்சிமா நகரத்துக் கோபுரச் சுடர்களைக் காணும்பொருட்டுப் பல அன்னவுருக்கொண்டு மேலே பறப்பது போலிருந்தன அக் கொடிகள்.

'தீபுரத்திடை மடுத்தவ ஞணையாற் சிறந்த
மாபுரத்திடை வான்நெடுங் கடிமதில் வரைப்பில்
ஆயுரத்தவாய்க் கிளர்ந்தவே யமைத்தவன் றென்னக்
கோபுரத்திடைக் கொழுந்துபோ லோங்கிய கொடிகள்'

(திருநகரப் படலம்—25)

வில்லி பாரதம் :

செயலை வெளிப்படுத்திப் பெயரை வெளிப்படுத்தாத ஆன்ற தமிழ்ப் புலவோருள் வில்லிபுத்தூர் ஆழ்வாரும் ஒருவர். வள்ளுவனும் கம்பனும் போட்டு வைத்த காவிய மரபெனும் கவினுறு சாலையில் இவரது தேர் குலுங்காமல் ஓடுகிறது. கண்ணனைப் படைத்துணைக்கு அழைப்பதற்காக வணங்காமுடி மன்னனாகிய துரியோதனன் துவாரகா நகருக்குள் நுழைகிறான். மதிலின் மீது நிற்கும் கொடி அலைபாய்கியது. 'துரியோதனா! துவாரகாபுரிக்குள் வராதே, நீ வராதே' எனத் தன் கைகொண்டு தடுப்பது போன்று ஆட்டி அலைக்கிறது. கோவலனைத் தடுத்த மதுரைக் கொடிக்கும் துரியோதனனைத் தடுத்த துவாரகைக் கொடிக்கும் வேறுபாடு உண்டு. மதுரைக்கொடி தன் அவலத்தை வெளிப்படுத்தியது ; துவாரகைக்கொடி தனது வெறுப்பைப் புலப்படுத்தியது.

'ஈண்டுநீ வரினு மெங்க ளெழிலுடை யெழினி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணை யாக மாட்டான்
மீண்டுபோ கென்றெ ன்றந்த வியன்மதிற் குடுமி தோறும்
காண்டகு பதாகையாடை கைகளாற் றடுப்ப போன்ற'

(உத்தியோக பருவம்–27)

ஈண்டு நீ வரினும் என்றது, 'துரியோதனனே! நீ வேந்தற்கு வேந்தன். வேந்தன் உதவி கேட்டுத் தானே வரமாட்டான். வேலையாளிடம் ஓலையை வேண்டிவிட்டால் போதுமானது. கண்ணபெருமானது தகுதியை உள்ளத்துள் போற்றி நீயே வருகிறாய் போலும். அப்படி வந்தாலும் அவன் பாண்டவர்களுக்குப் படைத்துணையாக வருவானே

தவிர உங்களுக்குப் படைத்துணையாக மாட்டான் என்று காண்தகு பதாகை யாடை கைகளால் தடுத்ததாம்.

சிந்தாமணி:

நந்தாவிளக்காகிய சிந்தாமணியில் இராசமாபுரத்துக் கொடி-யாடுகிறது. அதன் உயர்வு வானத்து மதிலையும் தாண்டியிருக்கிறது. விசும்பைத் தொட்டு ஆடிக் கொண்டிருக்கும் கொடி நிலவைப் பார்க்கிறது. நிலவுலகத்தில் கண்ட அழகிய பெண்களின் முகம் அக் கொடியின் நினைவிற்கு வருகிறது. தான் விரும்பும் பெண்ணின் முகமதி இப்படித்தானே இருக்கிறது எனக் கண்டு மகிழ்ந்து தன்னுடைய அங்கையால் நிலவைத் தட்டிக் கொடுக்கின்றதாம்.

"கிடங்கு சூழ்மதிற் கேழ்கிளர் பூங்கொடி
மடங்க ஞேக்கியர் வாண்முகம் போலுமென்
றுடங்கு வெண்மதி யுள்குளி ரத்தம
குடங்கை யாற்கொம்மை கொட்டுவ போன்றவே"

(காந்தருவ தத்தையார் இலம்பகம்—37)

சிந்தாமணிப் புலமை மிகுதியும் உடைய உமறுப்புலவர் இதே காட்சியினைத் தமது சீருப்புராணத்தில் அமைக்கின்ருர்:

"கடுவினை யடர்ந்த கொடுவினை விழியார் கறைதவிர்-
மதிமுகங் கண்டோ
படர்தரு மாடக் குடுமியின் விசித்த பசுங்கொடி
மதிமறுத் துடைக்கும்"

என்பதே அப் பகுதி.

காப்பிய ஆசிரியர்கள் அனைவருமே நாட்டையும் நகரையும் போற்றத் தனித்தனிப் படலம் அமைத்தனர். (தண்டியலங்காரம் காப்பிய இலக்கணம் பேசியதும் இப் படலத் தோற்றங்களுக்கு ஒரு காரணம், நகரப் படலத்தில்தான் கொடி வருணனைகள் பெரும்-பாலும் இடம் பெறுகின்றன. அதிலும் உணர்வை வெளிப்படுத்தும் கொடிகள் மட்டும்தான் ஈண்டு எடுத்துக் கொள்ளப் பெற்றன. மணிமேகலைக் காப்பியம் நூற்றுக்கணக்கான கொடிப்பெயர்களைக் கூறுகிறது. திருப்பாவை கூடக் கொடிகளைக் குறிக்கத் தவறவில்லை.

காப்பிய ஆசிரியர்களே யன்றித் தனிப்பாடலும் தொடர்ப் பாடல்களும் கூடத் தத்தம் வணக்கத்தைக் கொடிக்குச் செலுத்தத் தவறவில்லை. எடுத்துக்காட்டாக,

'எழுநிலை மாடத்துச் செழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல
நுண்துகிற் பதாகை கொண்டுகொண் டுகைப்பத்
துயிலின் நீங்கிப் பயிலும் வீதி'

(திருவிடைமருதூர் மும்மணிக் கோவை : உரு)

எனப் பட்டினத்துப்பிள்ளையார் தமது திருப்பாடல்களில் எழுநிலை மாடத்து உச்சியில் உறங்கும் செழுமுகில் அம் மாடத்துக் கொடிகள் ஆடித் தட்ட, துயில்நீங்கி மழை பெய்யப் பயின்றது என்பார்.

உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள். எனவே சிலம்புக்கொடி அவலத்தையும், கம்பன்கொடி உவகையையும், கந்தபுராணக்கொடி பக்தியையும், வில்லியார்கொடி வெறுப்பையுய் யும் சிந்தாமணிக் கொடியும் சீருப் புராணக் கொடியும் காதலோடு வியப்பையும் வெளிப்படுத்தின என்று ஐயமின்றிக் கூறலாம்.

சங்க இலக்கிய நோக்கில் மூதின் முல்லை

வே. ச. திருமாவளவன் M. A ; MOL ; B.Ed

தமிழில் அகம்-புறம் எனப்படும் இரு வாழ்வுக் கூறுகள் உள்ளன. இவற்றுள் அகமாகிய வாழ்வுக்கூறு கற்பனைச் செறிவோடும் கருத்துப் பொலிவோடும் புலமைச் செல்வர்களின் காதல்மாளிகையாய்க் கவினுற்றோங்கியது. ஆனால், புறமோ தண்டமிழ்ச் சமுதாயத்தின் கோட்பாடாய், இலட்சியக் கொடுமுடியாய், கற்பார்க்கு எழுச்சியும் கிளர்ச்சியும் ஊட்டுவதாய்க் கற்பனை ஊற்றம் குறைந்து மிளிர்ந்தது. அகவாழ்வு, எங்ஙனம் ஆடவர்-மகளிர் ஆகிய இரு பாலரின் பருவச் செழிப்பின் கூட்டுச் சுவையோ. அங்ஙனமே, புறவாழ்வும் அவ்விரு-பாலரின் ஒத்துழைப்பின் கூட்டமைப்பாகும். அஃதாவது அகவாழ்வில் மட்டுமன்றி, புறவாழ்விலும் மகளிர்க்குப் போதிய பங்குண்டு. புற-வாழ்வில் மகளிர்க்குரிய பங்கினையும் பாங்கினையும் பகரும் புறத்-துறையே மூதின் முல்லையாகும். இத் துறை சார்ந்த புறநானூற்றுப் பாடல்களின் அமைதியினையும் உணர்ச்சியினையும் இனி இவண் ஆய்வோம்.

மூதின் முல்லை என்பது தனியொரு துறையாகத் தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. ஆனால் குடிநிலை என்றொரு துறையினைத் தொல்காப்பியர் குறித்துள்ளார்.

> ''மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
> கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே''

என்ற நூற்பாவுரையில் இளம்பூரணர், ''குடிநிலை என்றதனால் மைந்தர்க்கும் மகளிர்க்கும் பொதுவாதல் அறிக'' என்றோதுவர். மேலும், அவர் ''இவற்றுள் ஆண்பால் பற்றி வந்ததனை இல்லாண் முல்லை எனவும் பெண்பால் பற்றி வந்ததனை மூதின்முல்லை எனவும் கூறுப'' என்று குறிப்பர்.

எனவே, ''தொல்காப்பியர் காலத்தில் குடிநிலை என்ற துறை ஆடவர்-பெண்டிர் ஆகிய இருபாலரின் குடியினது நிலைமையைக் கூறும் பெருந்துறையாயிருந்தது. அவர் காலத்திற்குப் பின்னர், இளம்பூரணர் குறிப்பிடுவது போல, இல்லாண்முல்லை எனவும் மூதின்-முல்லை எனவும் குடிநிலை உருப் பெற்றது'' எனக் கொள்ளலாம்.

மூதின் முல்லை என்றால் என்ன?

"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கு மறமிகுத் தன்று"

என்று இதன் இலக்கணத்தைப் புறப்பொருள் வெண்பாமாலை புகல்கின்றது. இதன்பொருள் "கொல்லும் வேலினையுடைய வீரர்க்கேயன்றி, அவ் வீரக்குடியில் மடப்பத்தினையுடைய அரிவைமார்க்கும் சினத்தைச் சிறப்பித்தது" என்பதாகும். எனவே, மறக்குடி மகளிரின் வீரவுணர்ச்சியினை விதந்துரைப்பதே இத்துறைக் கருத்து என்பது தேற்றம்.

புறநானூற்றுப் பாடல்களின் கருத்துப்படி மூதின்முல்லைத் துறையில் ஐந்து பாடல்கள் காணப்படுகின்றன.* அவையாவன: 279, 288, 306, 308, 312 என்னும் எண்ணுள்ளவையாம். இவ்வைந்து பாடல்களையும் முறையே ஒக்கூர் மாசாத்தியாரும் கழாத்தலையாரும் அள்ளூர் நன்முல்லையாரும் கோவூர்கிழாரும் பொன்முடியாரும் பாடியுள்ளனர். இவ்வைந்து பாடல்களில் கழாத்தலையார் பாடிய 288ஆம் பாடலைத் தவிர ஏனைய நான்கு பாடல்களும் வாகைத்திணை மூதின்முல்லையைச் சார்ந்தவை. கழாத்தலையார் பாடல் தும்பை மூதின்முல்லையைச் சார்ந்தது. 288, 306 ஆகிய பாடல்களின் இடைப் பகுதி சிதைந்துள்ளது.

சங்ககாலம், நாணயத்தின் இரு பக்கங்களாகக் காதலையும் வீரத்தையும் போற்றிக் கொண்டது. வீரமிலா மக்களை அக்காலச் சான்றோர் மதித்தாரல்லர்; மாறாக, வீரமிலாரைஇகழ்ந்துரைத்துள்ளனர். போரில் புறங்காட்டல் நாணத் தக்கதென நாட்டினர். புறப் புண் நாணி வடக்கிருந்து உயிர் நீத்த மான மன்னனைப் புறம் பாடியுள்ளமை காணலாம்.[1] அக் கால மக்கட்கு வழங்கப்பட்ட கல்வியும் பெரிதும் போர்க் கல்வியேயாம்.

'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே'[2]

'சான்றோர் மெய்ம்மறை'[3] என்ற இத் தொடர்களில் காணும் 'சான்றோன்', 'சான்றோர்' என்ற சொற்கட்கு வீரன், வீரர் என்றே பொருள்.[4] புறநானூற்றுக் குறிப்புரையில், "தன் குலத்திற்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி அதற்குரிய செய்கைகள் ஆகிய

* 289, 326 முதல் 335 வரையுள்ள பாடல்கள் மூதின் முல்லைக்கு உரியனவா அல்லது வல்லாண் முல்லைக்கு உரியனவா என்பது மேல் ஆய்விற்குரியது.

இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமையாம்''[5] என்ற விளக்கம் காணப்படுகின்றது. பதிற்றுப்பத்திலும் ''ஈண்டுச் சான்றோர் என்பது போரில் அமைதியுடைய வீரரை''[6] என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது. எனவே, போர் விருப்புடைய சங்க காலச் சமுதாயம் வீர மைந்தரை வேண்டி நின்றமை பெறப்படும். அத்தகைய வீர மைந்தரை விளைத்துத் தரும் கழனிகள்தாம் வீரத்தாயர். வலிமை சேர்க்கும் தாய் முலைப்பாலால் பிறவிப் பண்பாம் வீரப்பண்பு மணம் சிறக்கிறது.

வீரமைந்தரை ஈன்று புறந்தரும் தாயரின் மறப் பண்பினை மூதின் முல்லை திறம்படக் காட்டுகிறது.

'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' என்று வரும் ஒக்கூர் மாசாத்தியாரின் பாட்டுத் தொடக்கமே துறைப் பொருத்தத்துடன் சிறக்க அமைந்துள்ளது. இரண்டாம் அடி 'மூதில் மகளிர் ஆகுதல் தகுமே' என்ற அமைதியுடன் மூதில் முல்லையைச் சார்ந்தது என்பதனைத் தெற்றெனத் தெரிவிக்கிறது. இப் பாட்டுடைத் தலைவி மறக்குடியினைச் சார்ந்தவள் என்பது அவள்குடியைச் சேர்ந்த முத்தோர் 'கைவேல் களிற்றொடு போக்கிக்' களத்து இறந்துபட்டனர் என்பதாலும் நேற்று நிகழ்ந்த போரில் இம் மடந்தையின் கணவன் பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்தபோது கொல்லப்பட்டான் என்ப தாலும் இன்றும் போர்ப்பறை செவியுற்றதும் தன்மறக்குடியின் இயல்பிற்கேற்ப, தன் ஒரேமகனை வேல் கைக் கொடுத்து வெள்ளுடை உடுத்து, அலைந்து கிடந்த சிகையினை எண்ணெய் நீவிப் போர்க்களம் நோக்கிப் போ என அனுப்பினாள் என்பதாலும் புலப்படும். அவ் வீரத்தாயின் நெஞ்சுரத்தை வியந்து பாராட்டுகின்றார் ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவர். அம் மறக்குல மங்கையின் போர் விருப்பம், புகழ் விருப்பம், குடிப்பெருமை ஆகியவை இப் பாட்டில் இடம் பெற்றுள்ளன.

ஒக்கூர் மாசாத்தியாரின் இவ்வொரு பாட்டு ஐயனாரிதனாரின் கைவண்ணத்தில் கீழ்க்காணுமாறு இரண்டு வெண்பாக்களாய் உருப்பெறுகிறது.

''வந்த படைநோனான் வாயில் முலைபறித்து
வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கல் தான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு'' [11]

என்றும்,

"கல்நின்ருன் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்"

என்றும் அமைந்தன. மூதில் மகளிர் ஆதல் தகுமே என்பதனை மூதில் மடவாள் என்ற இப் பாட்டுத்தொடர் நினைவுறுத்துகின்றது.

போரில் இறந்துபட்ட வீரர்க்கு நடுகல் நாட்டி வழிபடுதல் பண்டைய வழக்கம். அவர் தெய்வமாகவே கருதித் தொழப்பட்டனர் தங்கட்கு விருந்தும் தம் கணவன்மார்க்கு விழுப்பகையும் வேண்டி அக்கால மடந்தையர் நடுகல்லைத் தொழுதனர். இதனை அள்ளூர் நன்முல்லையார் என்னும் பெண்பாற் புலவர் மூதின்முல்லைத் துறையில் அமைத்துள்ளார்.

"ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே என்னையும்
ஒ.......................... வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே"

(புறநானூறு–306)

இப் பாட்டில் 'நாடு தரு விழுப் பகை எய்துக' என்பது மூதில் மடந்தையின் போர்வேட்கையினைப் புலப்படுத்துவதால், இப் பாட்டு மூதின்முல்லைத் துறையாயிற்று. இது கண்டோர் கூற்று.

பொன்முடியாரின் புறப்பாடல் தாய், தந்தை, தொழிலாளர், அரசு ஆகியோரின் கடமையினைக் கோடிட்டுக் காட்டுகிறது. தாயின் கடமைமகனைப் பெற்றுத் தர வேண்டுவதாயின் அவனை வீரமைந்தனுய் வீறுபெற ஆக்க வேண்டுவது தந்தையின் கடமையாம். வீட்டுப் பொறுப்பில் வளர்ந்து உள வளமும் உடல் உரமும் பெற்ற மகன் சமுதாயப் பொறுப்பிற்கு வரும்போது போர்த் தொழிலிற்குரிய கருவி-களைப் பண்ணித் தர வேண்டியது கொல்லனது கடமையாகும். கருவி பெற்றபின் நல்லொழுக்க நெறியினைக் கற்பிப்பது வேந்தனது கடமை யாகும். இங்ஙனம் தாயின் தலையாய கடமையினின்று படிப்படியாய் உரமும் திறமும் பண்பும் ஒழுக்கமும் வளர்ந்து உருவாகிய இளைஞன் வெஞ்சமரில் வீரம் விளைத்து வெற்றி வீரனுய்த் திகழ்தல் வேண்டும்.

மக்கள் போற்ற வேண்டிய கடமைகளைச் சுட்டிக் காட்டும் இப் பாட்டில் பொன்முடியார் தம் குடியின் வீரச் சிறப்பினைப் பொதுவாய்க் கூறியுள்ளமையின் இதனை மூதின்முல்லை எனக் குறித்தனர் அறிஞர்.

சீறூர் மன்னன் ஒருவனுக்கும் பேரூர் மன்னன் ஒருவனுக்கும் போர் மூண்டது. பேரூர் மன்னன் வரைபுரையும் களிறொன்றின் மேலிருந்து பொருதான். சீறூர் மன்னன் கீழிருந்து போரிட்டான். சீறூர் மன்னனின் கைவேல் பேரூர் மன்னனின் களிற்றின் நெற்றியில் பாய, அவன் வெகுண்டு தன் வேலைச் சீறூர் மன்னனின் மார்பில் ஓச்ச, அஃது அவன்மார்பில் ஊடுருவிச் சென்றது. அவன் அதனைப் பறித்துப் பேரூர் மன்னனின் யானை மீது எறிந்தான். இதனைக் கண்ணுற்ற யானைகளெல்லாம் தம் பிடிகள் நாணப் புறங்கொடுத்தன.

இக் காட்சியினைப் புறநானூற்றில் கோவூர்கிழார் சித்திரித்துள்ளார். இப் பாட்டு, சீறூர் மன்னனின் பேரிற்கிழத்தி பாணன் ஒருவனை விளித்துக் கூறுமுகத்தான் அமைந்துள்ளது. இது பேரிற் கிழத்தியின் கூற்றென்பது,

"வேந்துடன் றெறிந்த வேலே என்னை
சாந்தார் அகலம் உளங்கழிந் தன்றே
உளங்கழி சுடர்ப்படை ஏந்திளம் பெருவிறல்" (308)

என்ற பாட்டடிகளில், 'என்னை' 'நம் பெருவிறல்' என்ற மொழிகளால் இனிதுறும் இம்மொழிகள் இலவாயின் இப் பாடல் ஏருண் முல்லையாகவோ வல்லாண் முல்லையாகவோ துறை வகுக்கப்பட்டிருக்கும். எனவே துறை வகுத்த பிற்காலச் சான்றோர் இதனை மனையோள் கூற்றென்பது கொண்டு மூதின்முல்லைப்பாற்படுத்தினர்.

இனிக் காணப்போகும் பாடல் தும்பை மூதின்முல்லைத் துறையில் கழாத்தலையாரால் பாடப்பட்டதாகும்.

ஒன்றனோடு ஒன்று போர் செய்து வென்ற நல்லானேற்றின் மயிர் சீவாது போர்த்தப்பட்ட திண்பிணி முரசம் போர்க்களத்தில் இடியென முழங்கிற்று. எதிரியின் கூரிய வேல் பாய்ந்ததனால் நாணமுற்று நிலஞ் சேர்ந்தான் அவ்வீரன். குருதி கொப்புளிக்கும் அவன் மார்பு இலேசாய் அசைவதாயிற்று. இந் நிலையில் பருந்து முதலிய பறவைகள் அவனை மொய்க்கத் தொடங்கின. தன் கணவனின் பேராண்மையினைச் செவியேற்ற அவன் மனைவி மார்பிற் புண்கண்டு முகமலர்ந்து தழீஇக் கொண்டாள்.

இப் பாட்டுக் கழாத்தலையார் கூற்றாய் அமைந்துள்ளது. இப்பாட்டில்.

"ஆரமர் மயங்கிய ஞாட்பில் தெறுவர
நெடுவேல் பாய்ந்த நாணுடை நெஞ்சத்து
அருகுறை .... மன்ற
குருதியொடு துயல்வரு மார்பின்
முயக்கிடை யீயாது மொய்த்தன பருந்தே" (288)

என்ற அடிகளில் மூதின்முல்லைப் பொருள் யாண்டுளது என்பதனைக் கண்டு ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் "வீழ்ந்த மறவன் மனையோள் அவன் மார்பைத் தான் தழுவுவதற்குப் பருந்துகள் இடம் தந்திலவாக, அவற்றை விலக்கித் தழீஇக் கொண்டாள் என்பது படக் கூறுதலில் இது மூதின்முல்லைத் துறையாயிற்று" என விளங்க உரைப்பர். இங்ஙனம் இவர் விளக்கவுரை வரைந்தமைக்குக் காரணம் இது மூதின்முல்லைத் துறையோ என்ற ஐயுறவேயாம.

கழாத்தலையாரின் இப் பாடல், ஒக்கூர் மாசாத்தியார் பாடலைப் போன்று மறக்குடி மகளிரின் தறுகண்மையினைக் கூறியதாகவோ, கோவூர்கிழாரின் பாடலைப் போன்று மனையோள் கூற்றாகவோ அமையவில்லை. மேலும், 'செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே', 'வேந்தனெடு நாடுதரு விழுப்பகை எய்துக' போன்ற போர்விருப்பினைக் காட்டும் உணர்ச்சிக் குமிழிகள் யாதொன்றுமில்லை. ஆயினும்,

"குருதியொடு துயல்வரு மார்பின்
முயக்கிடை ஈயாது மொய்த்தன பருந்தே"

என்ற அடிகளில் மறக்குடி மகளின் ஆர்வம் கொப்பளித்தலின் இதனை மூதின்முல்லை எனக் கொண்டனர் போலும்! புறப் பொருள் வெண்பாமாலையில் தும்பைத்திணையில் மூதின்முல்லைத் துறை இடம் பெறவில்லை; வாகைத் திணையிலேயே இடம் பெற்றுள்ளது. திணை, துறை வகுத்த அறிஞர் 'ஆரமர் மயங்கிய ஞாட்பு' என்ற தொடரமைப்புப் போர்க்கள நிகழ்ச்சியைச் சுட்டுவதாகக் கொண்டு தும்பைத்திணை யென வகுத்துரைத்தனர் எனலாம்.

இதுகாறும் ஆய்ந்தவற்றால் மூதின்முல்லை என்பதன் இலக்கணம் யாது என்பதும் புறநானூற்றுப் பாடல்களில் மூதின் முல்லைத் துறை அமைந்த ஐந்து பாடல்களில் கழாத்தலையாரின் பாடலொன்று தவிர ஏனைய நான்கும் நல்லிசை மெல்லியலாரின்

கூற்றுகவும் கண்டோர் கூற்றுகவும் அமைந்துள்ளன என்பதும் கழாத்தலையாரின் பாடல் மட்டுமே இம் மரபினின்றும் மாறுபட்டுள்ளது என்பதும் தெளிவாகின்றன.

மேற்கோள் பகுதி:

1. புறநானூறு — பாட்டெண் 65, 66
2. " " 312
3. பதிற்றுப் பத்து — உ. வே. சா. பதிப்பு. பக்.12
4. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் — க.கைலாசபதி பக். 38
5. புறநானூறு — உ. வே. சா. பதிப்பு. பக். 488
6. பதிற்றுப் பத்து " " பக். 13

மதுரைத் தமிழ்ச் சங்க ஸ்தாபகர்

பாலவ நத்தம் ஜமீன்தார்

ஸ்ரீமான்.

பி. பாண்டித்துரைச்சாமித்

தேவரவர்கள்

'பாலபிஷேகப் பழநிமலை' என்ற
மெட்டு

பாடலாசிரியர்

தேசிகபியாக் கண்ணிகள் சாப்பு

பாலவநத்த ஜமீந்தா ரெனும் மெங்கள்
பாண்டித்துரை யொரு பாவலனே
பண்டுள முச்சங்கப் பாங்கே தமிழ்ச் சங்கம்
பாரில் நிறுவிய காவலனே (பா)

மேலும் புலவர்கள் மெச்சும் ப்ரசங்கங்கள்
மிகுந்தநூ லாராய்ச்சி மிக்குடையான்
மேனுடை லாம்புகழ் வேண்டுவன பெற்ற
மேதகையான் கற்பகக் கொடையான் (பா)

தொகையரு

வேதநூ லகத்தியத்தை விளங்குதொல்காப்பியத்தை
ஆதியாமிலக்கியத்தை அரும்பிறவிலக்கணத்தை

முடுகுசந்தம்

விதவிதம் பதிப்பித்து வெளியிடத்தனமே
விகசிதமுடனளித் துதவினன் முனமே

பல்லவியெடுப்பு

விற்பன பாஸ்கர மாதாந்தச் செந்தமிழ்
வித்வக லாசாலை வாழியவே (பா)

பாடலாசிரியர் குறிப்பு :

இப்பாடல் ஆசிரியர் "முத்தமிழ்ச் சேத்திர மதுர பாஸ்கரதாஸ்" ஆவார். வள்ளல் பொன் பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்களைப் பற்றி 1925-ஆம் ஆண்டில் பாடப்பட்டுள்ள இப்பாடல் "இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்" என்னும் நூலில் வெளிவந்துள்ளது. நாடகத் துறைக்குச் சிறந்த தொண்டாற்றியவர் இவர். அவரைப் பெருமைப்படுத்தும் வண்ணம் மதுரை மாநகராட்சி நகர் மத்தியப் பேருந்து நிலையத்திற்கு அருகேயுள்ள ஒரு குடியிருப்புக்கு இவர் பெயரை இட்டு அழைக்கிறது.

இவ்வரிய பாடலை அளித்து உதவியவர் இக்கவிஞரின் மருமகன் திரு. K. S. கருப்பையா ஆவார். அவருக்கு எங்கள் நன்றி.

பாடலை அளித்து உதவியவர்

நிகண்டுகள்

(முதுபெரும்புலவர் ரா. ராகவ ஐயங்கார்)

வடமொழி - தென்மொழிகளிலே, நிகண்டு என்பது சொற்களின் பொருளை விளக்கும் நூல்கட்குப் பெயராக வழங்குகிறது. நன்னூல் விருத்திகாரர் நிகண்டு என்னுஞ் சொல் இடுகுறிப்பெயர் என்பர். இதனைச் (சொற்களின்) கூட்டம், தொகுதி என்னும் பொருளில் வந்த 'நிக்ரந்து' என்பதன்றிரிபு என்று கூறுவாருமுண்டு. இந் நிகண்டுகள் கவிரூபமாகவும், சூத்திரரூபமாகவும் மாணுக்கர் எளிதில் மனப்பாடம் பண்ணுவதற்கு ஏற்றபடி, முன்னோராற் செய்யப்பட்டுள்ளன. பாஷையில் அழுத்தமான ஞானத்தை நம் முன்னோர் இந் நிகண்டுப் படனத்தாலே மிகுதியும் அடைந்து வந்தனர். நச்சினார்க்கினியர் முதலிய புலவர் பெருமக்கள் எந்தச் சதுரகராதி, வின்ஸ்லோ அகராதிகளைக் கொண்டு தம் அருங் காரியங்களைச் சாதித்தார்? அவர்கள் மனத்தில் நின்ற சொற்கடல்முன் அவ்வச்சு அகராதிகள் குட்டங்களே யன்றே! ஆகவே நிகண்டு கற்று இலக்கிய விலக்கணந்தொடங்கிய நம்முன்னோரது வழக்கம், அவரது அழுத்தமான பாஷை ஞானத்துக்கு முக்கிய காரணமாயிருந்ததென்பதில் ஐயமில்லை. இத்தகைய நிகண்டு நூல்கள், அந்நிய தேசத்தவர்க்குப் புதியனவாகத் தோன்றினும், நமக்கு அவை இன்று நேற்றுக் கிடைத்தவையல்ல; ஆரியருஷிகள் வேதத்துக்கு அங்கங்களாக வகுத்த ஆறுவகைச் சாஸ்திரங்களுள்ளே நிருத்தம் என்பது ஒன்று. இஃது உலகியற் சொல்லொழித்து, வைதிகச் சொற்களின் பகுதி விகுதி முதலிய உறுப்புக்களைக் காட்டி, பதப் பொருள் முதலியவற்றை விளங்கவுரைக்கும் ஒரு கருவி நூலாம். இச் சாஸ்திரத்தை வேதத்திற்குச் செவியெனப் புனைந்து கூறுவர். "கற்பங் கைசந் தங்கால் எண்கண், தெற்றெ னிருத்தம் செவி சிக்கை மூக்கு, உற்றவியாக ரணமுகம் பெற்றுச் சார்பிற் றேன்றும் ஆரணவேதா" என்பது மணிமேகலை.

இந் நிருத்த வகையுள்ளேதான் நிகண்டு நூல்களையும் அடக்கிக் கூறுவர். இதனல், முற்காலந் தொடங்கியே, பதப்பொருள் கூறும் நூல்கள் பூர்வீகரால் கையாளப்பட்டுள்ளவை என்பது வெளியாம். இந் நிருத்தம் வைதிகச் சொல்லையே ஆராய்வதாகலின், அதனுடன் உலகியற் சொல்லையும் ஆராய்கின்ற நிகண்டு நூல்களே யாவர்க்கும் உபயோகமாவன. இந் நிகண்டு நூல்கள்: வடமொழியில் அமரசிஹ்மம், அமரதத்தம், விசுவம், விஷாமிர்தம், சப்தார்ணவம், சரஸ்வதி விலாசம் முதலிய பலவாகவுள்ளன. தென்மொழியில் திவாகரம், பிங்கலம்,

சூடாமணி, உரிச்சொல், கயாகரம், அகராதி, ஆசிரியம் முதலியன. இந் நிகண்டுகளெல்லாம் தமிழ்மொழியுணர்ச்சிக்கு இன்றியமை-யாதனவாக முன்பிருந்தனவாயினும், அகராதிகள் வெளிவரவே, இவற்றின் பயிற்சி நின்று வருகின்றது. ஏனெனில், அவ்வகராதிப் பிரதியொன்று பக்கத்துக் கிடக்குமாயின் பதப் பொருள்களையெல்லாம் மனனம் பண்ணியதுபோலவே அஃது உதவுவதாகின்றது. ஆகவே, இன்னுஞ் சிலகாலத்துள் நிகண்டுகள் பழைமை பெருமை பற்றி மட்டும் போற்றற்குரிய நூல்களாய், முற்றும் வழக்கு ஒழிந்து விடுமென்றே தோன்றுகிறது. இது பெரிதும் இரங்கத்தக்க சம்பவங்களுள் ஒன்றே.

க. திவாகரம்

தமிழில் வழங்கும் நிகண்டுகள், அவ்வக் காலத்து வழக்குகளைத் தழுவித் தக்கவர்களாற் செய்யப்பட்டன. இவற்றுள் திவாகரமே முன்னது. இதிற் சங்கத்துச் சான்றோர் வழக்குகள் மிகுதியாம். பிங்கலந்தை அதனினும் பிற்பட்டது; பிற சான்றோர் வழக்குகளை இதிற் காணலாம். ஏனைய நிகண்டுகளில் பிற்கால வழக்குகள் பயிலும். இவற்றையெல்லாம் விளக்குவதற்கு இஃது இடமில்லையாயினும், நிகண்டுகளைப்பற்றித் தனித்தனியே பேசும்போது முக்கியமான-வற்றைக் குறித்து எழுதப்படும். இனி, இந் நிகண்டுகளின் ஆதி வரலாறுகள் செந்தமிழ் மக்கட்கு இன்பந் தரத்தக்கனவாதலால், அவற்றை ஒவ்வொன்றுகக் காலமுறைப்படியே வைத்து என் சிற்றறிவிற் கேற்ப ஆராய்வேன்.

இம்முறையில் திவாகரம் முந்தியதென்று முன்னரே கூறினேன். இதற்கு முதனூல் ஆதி திவாகரம் என்பதொன்று எனச் சிலர் கூறுவர். அவ்வாறு ஒன்றுண்டென்பது எதனுலும் பெறப்படாமையால் அஃதீண் டாராய்ச்சியில்லை. இந்நூல் சேந்தன் என்னும் சிற்றரசன் வேண்டுகோளின்படி திவாகர முனிவராற் செய்யப்பட்டது; இது பற்றிச் சேந்தன் திவாகரம் எனவும் வழங்கும். இச் சேந்தன் என்பவன், காவிரிக் கரையிலுள்ள அம்பர் என்னும் நகர்க்கு அதிபதி-யென்பதும், ஆரியகுலத்தவனென்பதும், கல்வி கேள்வி மிக்கவ-னென்பதும் வடமொழி-தென்மொழிகளிற் செய்யுளியற்றும் வன்மை-யுடையவனென்பதும் இரவலர்க்கும் புலவர்க்கும் பெரிய களைகணை-வனென்பதும் திவாகரத்தால் விளங்குகின்றன. அன்றியும், சம்பாபதி எனப்படும் புகார்த்தெய்வத்திற்கு அந்தாதியும்; ஸ்ரீராமபிரானது கோதண்டம், அருச்சுனன் காண்டீபம், முருகக்கடவுள் வேலாயுதம்-

இம் மூன்றிற்கும் புகழ்ச்சிப்பாடலும் பாடினவனென்றும், இத்தகைய குணவிசேடங்களுடைமையால் நல்லிசைப் புலவராகிய ஔவையாற் புகழப்பட்டவனென்றும், அந்நிகண்டின் தொகுதியிறுதிக் கட்டுரைகள் கூறுகின்றன. புறநானூற்றில் 385-ஆம் பாடலாகிய "வெள்ளி தோன்றிய" என்னும் பாட்டுக் கல்லாடனர் இச் சேந்தனைப் புகழ்ந்து கூறியதாம். இவற்றால் திவாகரம் சங்க காலத்தே தோன்றிய பெருமையுடையதென்பது ஐயமின்றிப் போதரும். வேறு விதமாகச் சொல்லின், இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முந்தியது என்னலாம்.

இனி, திவாகரத்துள்ளே புகுந்தாராயின், அதிற் பிற்கால வழக்கொன்றும் காணமுடியாதென்பது திண்ணம். பிற்பட்ட நிகண்டுகளிற் போல, தமிழ்வள்ளலார் எழுவர் பெயர் இதிற் குறிக்கப்படவில்லை. இதன் காரணத்தை அறிதல் எளிது. அவ்வெழுவரும் திவாகரம் செய்யப்பட்ட காலத்தும் அதன் பின்னரும் விளங்கியவராதலின், இந் நிகண்டுடையார் அவரை வரையறுத்துத் தொகைகோடல் முடியாதன்றே? பின்வந்த பிங்கலர் முதலியோர்க்காயின், அவ்வாறு செய்தல் அமையும். இவ்வாறே பின்வந்தவராகிய குமணனையும் நல்லியக் கோடனையும் பாடிய புலவர்கள் அவ்வேழு வள்ளல்களையுஞ்* சுட்டித் தொகை கொண்டமை காண்க. இனி, பல்லவரென்னுஞ் சொல்வழக்கம் திவாகரர்க்குத் தெரிய வராதது. பிந்திய நிகண்டுகளில் அது காணப்படும். ஆனால் சாளுக்கிய வரசரைப் பற்றித் திவாகரம் கூறுகின்றது. இவர் வேள் புலவரசர் என்று குறிக்கப்பட்டுள்ளார். வேள்புலம் என்பது இப்போது பம்பாய் மாகாணத்தைச் சார்ந்த ஒரு பகுதியென்பதும் பிற சாளுக்கிய வரலாறுகளும் முன்னரே என்னால் விளக்கப்பட்டுள்ளன. இவ்வசரர் வராகத்துவசம் உடையவரென்பது, திவாகரத்தில், "கேழல் வேள்புல வரசர் கொடியே" என வருவதனால் தெரிகின்றது. பிற்பட்ட சாளுக்கிய சாஸனங்களில், "பாலித்துவசம்" என்பதன்றி இவர்க்கு வராகக் கொடி காணப்படவில்லையாயினும் வராக முத்திரை அவற்றிற் கூறப்படுகிறது. பாலித்துவசமும், பிந்திய சாளுக்கர் கொண்டதேயன்றி பழைய சாளுக்கியரதன்மை சாஸனத்தாலே அறியப்படுவதால், அப் பழையவர்க்கு, முத்திரைபோலக் கொடியும் பன்றி வரைந்ததாகவே யிருக்கலாமன்றே! இனி, பூழியன்என்னும் பெயர், பாண்டியனுக்கின்றி, சேரனொருவனுக்கே திவாகரத்திற் காணப்படுகிறது. சங்கநூல் முழுதுந் தேடினும் இவ்வாறே அதனைக் காணலாம். பதிற்றுப் பத்துப் பதிக-

* புறம் — 158; சிறுபாணாற்றுப்படை.

மொன்றில், களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல் என்பவன், ''பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ'' என்று புகழப்படுவதால், அவன் காலமுதல் 'பூழியன்' என்னும் பெயர் சேரற்கு வழங்கியதாகக் கருதலாம். இப்பெயர் வழக்கம், முத்தொள்ளாயிரமுடையார் திருமங்கையாழ்வார் காலம்வரையிலும் சேரற்கு வழங்கியதென்பது, † ''பூழியர் கோக்கோதை'' எனவும், ''பரனே பஞ்சவன் பூழியன் சோழன் பார்மன்னர் மன்னர்'' எனவும் வரும் அவ்விருவர் வாக்காலுந் தெரிகின்றது. பிற்பட்ட நிகண்டுகளிலும் நூல்களிலுந்-தான் இப்பெயர் பாண்டியர்க்கு வழங்கத் தொடங்குகிறது. இவை போன்ற சங்க காலத்து வழங்கிய செய்திகள் பல திவாகரத்தில் அறியக் கிடத்தலால், சரித்திர வாராய்ச்சிக்கு இது பெரிதும் உபயோகமான தென்னலாம்.

உ. பிங்கலம்

இனி, அடுத்த பிங்கலத்தைப் பற்றிச் சிறிது ஆராயப்படும். இந்-நிகண்டின் பாயிரத்தே இதனாசிரியராகிய பிங்கல முனிவர் திவாகரர் புத்திரர் என்று கூறப்படினும், நூற்கணுள்ள சில வழக்குகளை நோக்கும் போது, இது திவாகரத்திற்கு மிகவும் பிந்தியதாகவே எண்ணப்படுகிறது உதாரணமாக—பல்லவர் என்னும் பெயர் இழிஞர்க்கு இதில் காணப்-படுகிறது. இதனால், பல்லவ அரசர்தம் நிலைகுலைந்து இழிவுற்ற காலததே பிங்கலந்தை செய்யப்பட்டது போலும் என்று கருத இடமுண்டாம். திவாகரத்தில் இச் சொல் வழக்கமே கண்டதில்லை. இவ்வாறே பிற்கால வழக்குகளை அங்கங்கே இதிற் காணலாம். ஆயினும் இற்றைக்கு 725—வருஷங்கட்கு முந்தியதென்று தெளியப்-பட்ட நன்னூலுக்கு முற்பட்டதென்பது ''பிங்கல முதலா நல்லோருரிச் சொல்'' என்பதனாற் றெளிவாம். திவாகரத்திற் கண்ட சாளுக்கியர் முதலிய வழக்கு பிங்கலந்தையிற் காணப்படினும், அவை முந்நூலி-னின்று தழுவப்பட்டவை எனக் கொள்ளலே பொருத்தம். இதுநிற்க, ''குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே, உடம் போடுயிரிடை நட்பு'' என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் கூறிய உரையில் குடம்பை –முட்டை என்றெழுதப்பட்டதை, அவ்வாறு முன் னூல்களிற் பொருள் வழக்கில்லை என்று மறுத்தாருமுளர். 'குடம்பை முட்டையுங் கூடுமாகும்' என்பது பிங்கலந்தைச் சூத்திரமாதலால், பரிமேலழ-கருரை முழுதும் ஆதரவற்றதென்பது பொருந்தாமை காண்க.

இச் சூத்திரம் ஏட்டுப் பிரதியிலுங் கண்டது.

---

† முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் — 6, 7. (செந்தமிழ்த் தொகுதி — 4) பெரிய திருமொழி 7, 7, 4.

3. சூடாமணி நிகண்டு

இனி, இப் பிங்கலந்தையைக் காலத்தாலடுத்துக் கூறற்குரியது சூடாமணி நிகண்டு. இது வீரை மண்டல புருடர் என்னும் ஜைனரால் இயற்றப்பட்டது. இவர் ஆசிரியர் திருநறுங்குன்றை-குணபத்திராசாரியர் என்பவர். மண்டல புருடர் கிருஷ்ணராயர் காலத்தவரென்பது 'கிருட்டிணராயன் கைபோற் கொடை மடமென்ப தம்ம வரையாது கொடுத்தலாமே' எனக் கூறுதலால் வெளியாகிறது. இந்நிகண்டுடையாரே அருகத் தேவர்க்குப் புராணமொன்றும் இயற்றியிருந்தார் என்பது பாயிரத்தாலும், தொகுதியிறுதித் தற்சிறப்புப் பாடலாலும் அறியப்படும்.

இனித் தஞ்சைத் 'தமிழகம்' என்னும் பத்திரிகையிலே ஸ்ரீமத்-குப்புசாமி சாஸ்திரி அவர்கள்,

> ''ஒருங்குள பொருளு மோர்ந்திட் டுரைத்தனன் விருத்தந் தன்னில்
> இருந்தவை நல்லோர்குற்ற மியம்பிடா ரென்ப தெண்ணித்
> திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்
> பரந்தசீர்க் குணபத்ரன்ருள் பணிந்த மண் டலவன்ருனே'

என்னும் பாடலில், 'திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்' என்னும் விசேடணத்தைக் ''குணபத்திர''னுக்கேற்றி மகாபுராணத்தின் பிற்பாகமாகிய உத்தரபுராணத்தைச் செய்தவரும் இரட்டவரசனுகிய அமோக வர்ஷன் காலத்தவருமாகிய குணபத்திராசரியரே மண்டல புருடர் ஆசிரியரென்றும், அதனுல் இந் நிகண்டின் காலம் இற்றைக்கு 1000 வருஷத்துக்கு முற்பட்டதாகல் வேண்டுமென்றும் எழுதியிருக்கிருர்கள். அவர்கள் ஆராய்ச்சி உண்மையிற் புகழத் தக்கதாயினும் சில விஷயங்கள் எமக்கு ஐயந்தருகின்றன. சூடாமணி நிகண்டுப் பாயிரத்திலே 'சொல்லொடு பொருளுணர்ந்தோன்' என்னுங் கலிமுதலாக ''செகமெனும் பளிங்குமாட'' என்னுங் கவியீருக மண்டல புருடராசியராகிய குணபத்திரர் புகழப்பட்டிருத்தலும் அவற்றுக்கு அடுத்த கலியிரண்டினும் மண்டல புருடர் கூறப்படுதலும் நோக்குவார்க்கு நன்கு புலப்படும். இவற்றில் பிற்கூறியதிற்ருன் ''திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன், பரந்த சீர்க்குணபத்ரன்ருள் பணிந்த மண்டல வன்ருனே' எனப் புராணச் செய்தி வருகிறது.

இங்கே கூறிய "திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்" என்பது உத்தரமகா புராணஞ் செய்த குணபத்திரராயின், அவரைப் பற்றிய பாடலிற் கூறும் விசேடணங்களோடு முக்கியமான இவ்விஷயமும் சேர்க்கப்படுவது முறையன்றோ? மண்டல புருடரைப் புகழுமிடத்து ஐயத்துக்கிடமான நிலையில், அத்தொடர் வைக்கப்பட நியாயமில்லை; ஆதலால், "திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன்" என்பது மண்டல-வனுக்குக் கூறப்பட்ட அடையாகக் கொள்வதே நேரானதாம். சாஸ்திரிகள் சூடாமணி நிகண்டைப் பற்றி எழுதியதற்கு முன்பே வெளிவந்த மணிமேகலைப் பதிப்பில், மஹாமஹோபாத்தியாய-ஸ்ரீ. சாமிநாதையரவர்கள் "இந் நூலாசிரியர் சைந மதத்தினரும் பெரு-மண்டூர் என்கிற வீரபுரத்திலிருந்தவரும் அருக தேவன் சரித்திரத்தைப் புராணமாகச் செய்தவருமாகிய மண்டல புருட ரென்பவர்". (பக்கம் 390) என்றெழுதியிருத்தலால், அத் தொடர்க்கு அவர்கள் கொண்ட கருத்தும் நான் கூறியதேயாதல் காண்க. அன்றியும் சூடாமணி வாக்கையும் போக்கையும் நோக்கும்போது, சாஸ்திரிகள் கூறியபடி, அவ்வளவு பழங்காலத்துக்கு அஃதுரியதா என்ற ஐயம் தமிழறிஞர்க்குத் தோன்றுமலிராது.

ஆயினும் குணபத்திராசாரியர் வேறு யாவர்? என்னுங்கேள்வி இங்கேயுண்டாகலாம். விஜய நகர ராயர் காலத்தில் அப்பெயர் தரித்த ஒருவர் இருந்திருத்தல் கூடாதென்பதற்கு நியாயமில்லை. அன்றே, அமோகவர்ஷன் காலத்துக் குணபத்திரர் தமிழ்நாட்டவரே என்பதற்கேனும் ஆதாரம் உண்டா? இவ்வாறு, குணபத்திரர் இருவராகவேண்டுமென்று நான் கூறுவது சிறிதும் ஆதரவற்ற விதண்டையன்று. சென்னை ராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையில், (Government Oriental Manuscript Library) "யதிதர்மம் சாவகதர்மம்" என்றொரு பிரதியுள்ளது. இதில் ஜைனமத விஷயங்களும் வரலாறுகளும் பரக்க எழுதப்பட்டுள்ளன. முழுதும் வசன-நடையில் அமைந்த இக்கிரந்தம் சிறந்தபண்டிதரால்எழுதப்பட்டதாகத் தெரியவில்லையாயினும், தம் சொந்த மத வரலாறுகளை நன்கறிந்த ஜைனரொருவரால் இஃது எழுதப்பட்டதென்று நிச்சயமாய் நம்பலாம். இதில் "பண்டிதர்வயணம்' என்பதன் கீழ், குணப்பத்திராசாரியர் என்பவர் ஐந்நூற்றுச் சில்லறை வருஷங்கட்கு முன் விஷ்ணு தேவராயர் காலத்தில்,* ஜைன மார்க்கத்திலே நடந்த சில மாறுபாடுகளை நீக்கி அதைக் காத்தற்காகப் "பண்டிதர்களை" நியமித்தார் என்னும்

---

*கிருஷ்ணதேவராயர் என்பது இவ்வாறு பிறழ்ந்தது போலும்.

விஷயங் கூறப்பட்டுள்ளது. இதனுல், குணபத்திராசாரியர் என்பவரொருவர், பிற்காலத்து ராயர் நாளில் தென்னுட்டிலே விளங்கினரென்று தெரியவருதலால், இரட்டவரசனுகிய அமோகவர்ஷன் காலத்தவரை மண்டல புருடர் ஆசிரியராகக் கொள்ள வேண்டிய அவசியமில்லையென்றே தோற்றுகிறது.

இனி, சோதிட நூலாகிய "சூடாமணி உள்ளமுடையான்" இயற்றியவர் இம்மண்டல புருடரேயென்பது அந்நூற்பதிப்பிலும், வேறு சிலரெழுத்துக்களிலுங் காணப்படுகிறது. இவ்வாறு கூறியதற்குக் காரணம்:–"சூடாமணி" என்னும் விசேடணம், நிகண்டுக்கும் உள்ளமுடையானுக்கும் ஒப்ப அமைந்திருத்தலே போலும்! அவ்வுள்ளமுடையானுலாசிரியர், கடவூராயரின் திருக்–கோட்டி நம்பி என்பது அந் நூலிறுதிச் செய்யுளால் நன்கறியப்படுவதை அன்னேர் பார்த்திலர். "செந்தமிழ்" முதற்ருெகுதி 469ஆம் பக்கத்தும் அவ்வாசிரியர் வரலாறு காண்க.

4. உரிச் சொல்

இனிவரும் நிகண்டுகளைக் காலத்தால் ஒருமுறை பெறும்படி வைப்பதில் சிறிது இடர்ப்பாடுண்டாயினும், எல்லாவற்றுக்கும் பிந்திய ஆசிரிய நிகண்டுடையார் நமக்கு ஒரு வழி காட்டியுள்ளார். அந்நிகண்டுப் பாயிரத்திலே,

"முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்துகாங் கயனுரிச் சொல்
முறைபெறு கயாகரம் பகருமக ராதியிவை
முற்று மொன்ருத் திரட்டி."

என, நிகண்டுகளின் வரிசை கூறப்பட்ட அடிகள் வருகின்றன. இம்முறைப்படியே, சூடாமணியை யடுத்து உரிச்சொனிகண்டைக்கூறலாம். இவ்வாறு உரிச்சொனிகண்டைப் பிற்காலத்ததென்று கொள்வதற்குச் சிறந்த காரணமொன்றும் உண்டு. வணங்கற் பொருளில் சலாஞ் செய்தல் என்னும் சொல்வழக்கம் நம் நாட்டில் வழங்கத் தொடங்கியது துருக்கராட்சிக்குப் பிந்தியகாலத்தே என்பது யாவருக்குந் தோன்றத்தக்கது. இச் சொல்வழக்கு பிங்கலந்தை சூடாமணி நிகண்டுகளில் காணக்கிடையாதாயினும், உரிச்சொனிகண்டில்,

"வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ் செய்தல்"

(6-வது செயல் பற்றிய பெயர்த் தொகுதி — பாட்டு. 2)

என வணங்கற் பொருளில் எடுத்தாளப்படுகிறது. இதனால் இந் நிகண்டுடையார்க்குப் பழைமை கூறுதல் சிறிதும் பொருந்தாமை காண்க. இதே சொல்வழக்கை, துருக்கராட்சிக்காலத்து விளங்கிய ஸ்ரீ குமரகுருபரமுனிவர், தம் மீனாக்ஷியம்மைப் பிள்ளைத்தமிழில் "குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனை முத்துக்குமரனைப் போற்றுதும்" என்னுந்தொடரில் ஆண்டனர். ஆகவே உரிச்சொல் நிகண்டும், அம்முனிவர்காலத்தை யடுத்துச் சிறிது முன்னே பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று கருதலே பொருத்தமாகும்.

இனி, இந் நிகண்டியற்றிய காங்கேயரைப் பற்றி விசேட-மொன்றும் அறிதல் கூடவில்லை. இவர் பெயரால், இவர் கங்க வம்சத்தவராயிருக்கலாமென்று தோன்றுகிறது. "இம்முடி" என்னும் பட்டம் இவர்க்குக் கூறப்படுகிறது. இப் பட்டம், கொங்கு நாட்டு வேளாள வகுப்பாராகிய "கவுண்டரில்" ஒரு பிரிவினர்க்குரிய குடிப் பெயராக இன்றும் வழங்குவதாகக் கேள்வி. இவர் நிகண்டு 288 இனிய வெண்பாவில் அமைந்தது.

இவ்வுரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டுக்கு முந்திய-தென்பது, தொண்டை மண்டல சதகமுடையார் கொள்கை. இதனை:—

"பண்டை நிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச் சொ
லெண்டிசையின் சொல்வடமொழிச் செய்யுளெல்லா முணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டு சூளாமணி தானுரைத்த
மண்டலவன் குடிகொண்டது நீடொண்ட மண்டலமே".

என்பதனாற் காண்க. இப்பாடலால் மண்டலவனிகண்டுக்கு "நிகண்டு சூளாமணி" என்பது பெயரென்று தெரிகிறது.

ரு. கயாகர நிகண்டு

முன்கூறிய முறைப்படி இக் காங்கேயனுரிச்சொல்லையடுத்து நிற்பது கயாகர நிகண்டு. இந் நூல் இனிய கட்டளைக் கலித்துறையில் அமைந்தது. இதன் சிதைந்த பிரதியொன்று இச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் உண்டு. இது கயாகரர் என்பவராற் செய்யப்பட்ட-தாகலின் அப் பெயர் பெற்றது. (கயாகரர் — சொற்கிருப்பிடமானவர்;

கை - சொல்). இக் கயாகரர் — தேவை எனப்படும் இராமேசுவரத்தவ-ரென்பதும், வேதம்வல்ல அந்தணரில் காசிப கோத்திரத்தவரென்பதும், கல்வி கேள்வி மிக்கவரென்பதும், இராமீசுவரர்பேரில் கோவையொன்று பாடினவரென்பதும் இவர் நூலாலே விளங்குகின்றன. இவற்றை :—

"பேதையர் பித்தர் அறியாத பாலர்சொற் பேதங்கொள்ளார்
ஓதினுங் குற்றந் தெரியார் பெரியவ ரோங்கிடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கெயாத ரன்றேல்
வேதியன் சொற்ற வுரிச்சொற் பனுவலு மேம்படுமே."

"தீட்டு மறைபயில் நாவினன் என்னுஞ் செந்தமிழ் நூல்
கேட்ட செவியின் கேளா வறிவன் கெயாதரத்துள்"

"காசிப கோத்திரம் வாழ்வந் தோன்தென் கலைத்தமிழ் தேர்
மாசில் பெருந்தகை மாரு வறிவன் மலரயனும்
கேசவ னும்புகழ் தேவை நன்னுடன் கெயாதரம்."

'மேவு மரும்பொரு ளந்தாதி கேட்டிந்த மேதினியோர்
தாவும் வினைகெடச் சாற்றிய தென்றமிழ்த் தேவை மன்னும்
கோவை யிராமீ சுரக்கோவை சொற்ற குருபரன் மற்
றேவுத லின்றி மையத் தான்பத் தாவ தொலியியலே."

என்பவற்றாற் காண்க. இவர் பாடியதாகத் தெரியும் இராமேசுவரக் கோவை இப்பொழுது எங்குள்ளதோ தெரியவில்லை. இந்நிகண்டு முந்திய நிகண்டுச் சொற்களையே கொண்டுள்ளமையால் இதனின்று புதிய விசேடங்கள் என் பார்வையிற்பட்டில. இக் கயாகரத்தின் பெருமை, தொண்டைமண்டலத்தாராகிய ஆசிரிய நிகண்டுடை யார்க்கு நன்கு தெரியவந்து அவராற் புகழப்படுதலாலும், அகராதி நிகண்டுக்கும் முந்தி இதுவைத்துக் கூறப்படுதலாலும் இஃது இற்றைக்கு 300-வருஷங்கட்கு முற்பட்டதென்பது திண்ணம். அகராதி நிகண்டின் காலம் பின்னர்த் தெளியக் காட்டப்படும்.

6. அகராதி நிகண்டு

இக் கயாகரத்தையடுத்து அகராதி நிகண்டு என்பது "முறை பெறுகயாகரம் பகரு மகரா தியிவை" என்னும் ஆசிரிய நிகண்டுத் தொடரால் விளங்கும். இதன் பிரதியிரண்டு இச் சங்கப் புத்தகசாலையில் உள்ளன. இந்நூல், சிதம்பரமிரேவணசித்தர் என்னும் பெரியவரால் இயற்றப் பெற்றது. "இரேவணாராத்திரியர் சூத்திர வகராதி" என்று கேள்விப்படுவது இதுவேயாதல் வேண்டும். இச் சித்தர், தொண்டை நாட்டு வேளாளரென்பதும் சிதம்பரத்திலிருந்தவரென்பதும்

கல்வி கேள்வி வல்லவரென்பதும், சிவஞானியென்பதும் இந் நிகண்டால் அறியப்படுகின்றன. இவ்வகராதி நிகண்டு சகாப்தம் கி. பி. 1594ல் முடிக்கப்பெற்றது. இந் நிகண்டின் தொடக்கத்தே இவர் பாடியதாகக் காணப்பட்ட அகவலொன்று' இந்நூலின் வரலாற்றை நன்கு விளக்குதல் அடியிற் காண்க:-

"உலகினர் பவமற மலைமக டவஞ்செயும்
தேசு கொளும்பட் டீசுரன் பதம்பணிந்
தொலிகெழு கடல்சூ முலகினிற் றெரிக்கும்
இயற் சொறிரிசொறி சைச்சொல் வடசொலென்
றுரைதரு சொற்கள் ஒருநான் கதனிற்
றிரிசொலின் பேத மிருவகை யது தான்
ஒருசொற் றுனே பலபொரு ளாகியு
பல சொற் றுனே யொருபொரு ணிலவியும்
வரு மிதி லொரு சொற் பலபொரு ளதனைத்
தெரிதரு பிங்கலந் திவாகர் முதலாப்
பரவிய நிகண்டு பலவெடுத் தாராய்ந்து
அதிற்சில திரட்டி அகர முதலா
மதித்தெழு வகர மீருய் மொழி முதல்
எழுத்து நூற்றெரு நாலி னடைவே
எழுதரு சூத்திர முதற்பதந் தோறும்
வருபெய ராதிப் பொருளா வெடுத்தே
ஒருபெயர் முதனூற் பத்தா றீரு
நிகழ்தரு வுரைக்குந் தொகை...... ....பெயர்
அடைவினி லங்கங் கமர்ந்துள பெயரும்
இடையிடை யடைவிலங் கில்லாப் பெயரும்
மன்னுசூத் திரமூவாயிர்த் துடனே
முந்நூற் றுப்பத் தெட்டெனுந் தொகையர்
வந்திடுந் தொகுதியீ ரைந்தென வகுத்தே
அரிய சகாத்த மாயிரத் தைஞ்நூற்
றெருபத் தாறென் வுரைத்திடு மாண்டினில்
ஐந்தி காரம் அறுபத்து நாற்கலை
உந்திய வறிவா லொருங்குட னுணர்ந்த
நாற்கவி வாணர் நகைதர யானும்
நூற்பா வதனு னுண்ணிய வுணர்வில்
ஆதர வாலக ராதி நிகண்டென
ஓதினன் யாவரு முணர்தர நினைந்தே"

இவ் விரேவணசித்தர் திருமேற்றளிப்புராணம், திருவலஞ்சுழிப் புராணம் திருப்பட்டீச்சுரப் புராணம் — என்னும் மூன்று புராணங்கள் இயற்றியவரென்பது:-

''பவமறத் தெளிந்த சிவதரி சனத்தோன்
திருமேற் றளிக்குச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரிதரு சிதம்பர ரேவண சித்தன்''.

''வரமிகு வலஞ்சுழி வாணர்தம் புராணமும்
உரைதரு ரேவணன்''.

''திருப்பட் டீச்சுரச் செந்தமிழ்ப் புராணம்
தெரிந்தநற் சிதம்பர ரேவணன்''.

என்னும் அடிகளிற் கண்டு கொள்க. திருமேற்றளியென்பது காஞ்சிப்பிரதேசத்தைச் சார்ந்தது. திருவலஞ்சுழியும், திருப்பட்டீசுவரமும் கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள சிவஸ்தலங்களாம். இவையன்றி சிவஞானதீபம் என்னும் சைவசமய கிரந்தமொன்றும், இவராற் செய்யப்பட்டதென்று தெரிகிறது. இந்நூல் சுபாநுவருஷம் பதிப்பிக்கப்பட்டது.

எ. ஆசிரிய நிகண்டு

இனி, இந் நிகண்டுகளிலெல்லாம் பிற்பட்டது ஆசிரிய நிகண்டு. இஃது ஆசிரிய விருத்தத்தால் அமைந்தமையின் அப்பெயர் பெற்றது. இஃதியற்றியவர் தொண்டை மண்டலத்துச் செஞ்சிச் சீமையைச் சார்ந்த ஊற்றங்காலில், பாவாடை வாத்தியார் குமாரர் ஆண்டிப் புலவர் என்பார். இப்புலவர், இந்நிகண்டுடன், நன்னூற்கு ஓர் உரையும் இயற்றியவரென்றும் தெரியவருகிறது. இச் சங்கத்துப் புத்தகசாலையில் சங்கரநமச்சிவாய ருரையல்லாத வேறோர் உரைப்பிரதியுமுண்டு; ஆனால் அதுவே இந்நிகண்டுடையார் செய்தவுரையென்பது துணியக்கூடவில்லை. இவர் நன்னூற்கு முரைசெய்தவரென்பதை ஆசிரிய நிகண்டுப் பாயிரத்தில்வரும், ''இயம்பிய நிகண்டினு மறியன்னூலினு டிரண்டுமே செய்து வைத்தான்'' என்னுந் தொடரால் அறிக. இந் நிகண்டின் முதலிரண்டு தொகுதிகள் சில வருடங்களுக்கு முன்பு அச்சிடப்பட்டன.

இவ்வாறு வழங்கும் ஏழு நிகண்டுகளையன்றி வேறு சில நிகண்டுகளும் இந்நாட்டில் வழங்கலாம். ஆனால் பிரசித்தமானவை மேற்காட்டிய நூல்களாகும். ஐந்திணை நிகண்டு என்பதொன்றுள்ளதாகக் கேள்விப்பட்டதுண்டு. இந் நிகண்டுகளெல்லாம் பெரும்பான்மை வழக்கு வீழ்ந்தனவாயினும், தமிழர்க்குப் பெரிதும் அலங்காரந் தருவனவாதலின் அவற்றின் வரலாறுகளை எழுதத் துணிந்தேன். எண்ணத்திலடங்காத செய்திகள் பல இவற்றைக் குறித்திருத்தல் கூடும். அவையெல்லாம் அறிந்தவர்வாய்க் கேட்டு மகிழ்ந்து கொள்க.

எழுத்துச் சீர்திருத்தம் தேவையா?

டி. பி. எம். பெரியசுவாமி

கடந்த சில வாரங்களாக செய்தித்தாள்களில் பரவலாக விவாதிக்கப்படும் செய்தி எழுத்துச் சீர்திருத்தமாகும். பெரியார் ஈ. வெ. ராவின் நூற்றுண்டு விழாவினையொட்டி, அவர் மேற்கொண்ட இச் சீர்திருத்தத்தை அரசினரும் ஏற்றுக்கொண்டு கல்வித்துறை மூலமாக ஒரு ஆணை பிறப்பித்துள்ளனர். தமிழ்மொழியின் குறிப்பிட்ட பதினைந்து எழுத்துக்களின் வரிவடிவம் தற்போது மாற்றப்படுகிறது. குறிப்பிடத்தக்க மாற்றம் இரண்டு எழுத்துக்களில் காணப்படுகிறது.

ஐ — அய்

ஔ — அவ்

அரசினரும் ஏற்றுக் கொண்ட இத்திருத்தங்களைப் பற்றி நிறைவாகவும் குறைவாகவும் தொடர்ந்து பேசப்படுகிறது. மொழியினைத் திருத்துவது முற்றிலும் தவறு என்று ஒருவரும் கூறவில்லை. எப்போது திருத்த வேண்டும், எப்படித் திருத்த வேண்டும் என்பதில்தான் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனவே வேறுபாடுகளைப்பற்றி அதிகம் கவலையுறத் தேவையில்லை. வளருகின்ற எந்த மொழியும் கருத்துக் கண்ணோட்டத்தில் விளையும் உள்ளீட்டு மாறுபாடுகளையும், எழுத்து வடிவத்தில் வரக்கூடிய வெளிப்படையான திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். மேலும் இந்தச் சீர்திருத்திய எழுத்துகளினால், எந்தவிதக் குழப்பமும் விளையப்போவதில்லை. கடந்த நாற்பது ஆண்டுகளாக ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள் 'குடியரசு', 'விடுதலை' போன்ற தமது செய்தி இதழ்களில் இவற்றைப் பயன்படுத்தி வந்தார். 1935-ஆம் ஆண்டுக்குப் பிறகு வந்த 'குடியரசு' இதழ்களில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்து வேறுபாடுகளையும் வெளியிட்டு வந்தார்கள். அச்சடிப்பில் இந்தச் சீர்திருத்தம் பெரிதும் துணை புரியும் என்றே அப்போது ஒத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்மொழியில் வீரமாமுனிவரும் சில திருத்தங்களைச் செய்துள்ளார் என்பதும், அவற்றை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

ஏ, ஒ - என்ற இரண்டு உயிரெழுத்துகளை (நெடில்) ஏ-ஓ என்று வீரமாமுனிவர் மாற்றினர். ஆங்கில மொழியிலும் எழுத்துகளைத் திருத்த வேண்டும் என்ற முயற்சி கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. புகழ்பெற்ற அய்ரிஷ் நாடகாசிரியர் பெர்னட்ஷா ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய்களை இதற்கென்றே ஒதுக்கியுள்ளார். தேவையற்ற எழுத்துகளை நீக்கி விட வேண்டும் என்பதில் ஐயமில்லை. பழைமை விரும்பிகளான ஆங்கிலேயர்கள் 'Colour' என்று எழுதினாலும், அமெரிக்கர்கள் விரும்புவதும், எழுதுவதும் 'coloı' என்ற சொல்லைத்தான். திருந்திய முறையின்படி 'ஔவையார்' என்று எழுதுவதற்குப் பதிலாக 'அவ்வையார்' என்றே இனி நாம் எழுதவேண்டும். இச்சீர்திருத்தம் வேறெந்தக் குழப்பத்தையும் விளைவிக்காதெனவே, தமிழ்மக்கள் இத்திருத்தத்தினை ஏற்றுக் கொள்ளுதல் பொருத்தம் எனவே எமக்குப்படுகிறது. பெரியாரின் நினைவாக, இச்சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த தமிழக அரசைப் பாராட்டுகிறோம்.

நூல் மதிப்புரை

(1) நூல் : தமிழ் மருத்துவ நூல் (i) உடற் கூற்றுப்படலம்
(ii) நோய் ஆராய்ச்சிப்படலம்
(iii) Physiology and Anatomy

ஆசிரியர் : கவிராச பண்டித. இராம சுப்பிரமணிய நாவலர்
நாகர்கோவில் - 2

விலை : ரூ. 20

நுணுகிய புலமைநலம் சான்ற கவிராச பண்டிதர் அவர்களின் மேற்குறிப்பிட்ட நூல்களில் முதலிரண்டும் தமிழில் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. தொடர்ந்து வரும் விளக்கங்கள் செய்யுளைத் தெளிவு படுத்துகின்றன' இரண்டு நூல்களிலும் பொருளடக்கம் இல்லாதது ஒரு சிறுகுறை. தமிழ் மருத்துவத்துறையில் நாவலருக்குள்ள ஈடுபாடு பெரிதும் பாராட்டத்தக்கது. தமிழ்நாட்டுக்குரிய நோய்களை மனதிற்கொண்டு இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. சித்த மருத்துவத்தைத் தக்காங்கு பரப்புதல் வேண்டும் எனும் எண்ணம் கொண்ட தமிழக அரசினர் இத்தகு நூல்களைப் பாராட்டுவதோடன்றி, நாவலர் போன்ற தமிழறிஞர்களை ஊக்குவிக்க வேண்டும். உடற் கூற்றுப் படலம் என்ற நூலின் முன்னுரை 'தமிழ் மருத்துவம்' பற்றி அறிய விரும்புவார்க்கு ஒரு அரிய ஆய்வுக்கட்டுரையாகும். மருத்துவக் கல்லூரிகளிலும் தமிழில் பாடம் நடத்துதல் வேண்டும் என்று விரும்பப்படுகின்ற இற்றை நாட்களில் இத்தகு நூல்கள் பாராட்டுதற்குரியன. வெறுஞ் செய்யுள் தொகுப்பாக மட்டுமன்றி, ஆங்காங்கே உடலின் பல்வேறு பகுதிகள் வரைபடங்களாகக் காணபிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மருத்துவக்கல்லூரி மாணவர்கட்கு உடற்கூறு பற்றிய முன்னுரையாகக் கருதத்தகும் மூன்ருவது நூல் முற்றிலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் மருத்துவநூல் படைக்கும் கவிராச பண்டிதர் அவர்கள் நமது பாராட்டுக்கு உரியவர்கள்.

(2) நூல்: வருகை (கவிதைகள்)
ஆசிரியர்: கவிஞர் இளங்கம்பன்
வெளியீடு: சித்ரகூடம், பழனி.
விலை: ரூபாய் ஐந்து

தமிழ்க் கவிதை உலகில் நன்கு அறிமுகமானவர் கவிஞர் இளங்கம்பன். பல்சுவைக் கவிதைகளும் அடங்கிய அவர்தம் நூலே 'வருகை'. புரட்சிக் கவிஞன் பாரதிக்கு 'அஞ்சலி' செலுத்தும் அழகுத் தமிழ்க் கவிதை, நூலின் தொடக்கத்திலேயே அணி செய்கிறது. பாரதியின் நீடுதமிழ்க் கவிதையோட்டத்தை

'பள்ளி விட்டுத் துள்ளி வரும் சேய்கள் போலப்
பாய்ந்து வரும் சொற்களினுல் பாக்கள் செய்தாய்'

என்னும் இரண்டு வரிகளில் அடக்கிய பாங்கு பாராட்டத்தக்கது. மரபுவழிக் கவிதைகளை நிரம்பவும் உள்ளடக்கிய இக்கவிதை நூலில் சந்தக்கவிகளுக்கும், புதுக்கவிதைக்கும் பஞ்சமில்லை. 'நெஞ்சப்பூக்களி'ல் இறுதியாக 'உன்னைத் தொழுவதன்றி ஒண்டமிழே' என்று வரும் வெண்பா 'உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்' எனும் வெண்பாவை நினைவுபடுத்துகிறது. பக்கம் 50-இல்,

'நூலெடுத்தே அவள்பின்ன எனது நெஞ்சோ
நூறுமுறை அவள்நெஞ்சில் பின்னி மீளும்'

என வரும் இறுதி வரிகள்

'செக்கச் சிவந்த கழுநீரும்-செகத்தில்
இளைஞர் ஆருயிரும்
ஒக்கச் செருகும் குழல் மடவீர்
உம்பொற் கபாடம் திறமினே' எனும்

செயங்கொண்டாரை உள்ளடக்கியுள்ளது. பண்டைத் தமிழ் இலக்கியத்தில் கால்கொண்ட கவிதை நெஞ்சம், இற்றை நாட்களில் வினக்குறியை எழுப்பி வரும் புதுக்கவிதையிலும் நாட்டம் கொண்டது வியப்பிலும் வியப்பே. 'மரம்' என்ற தலைப்பில் வரும் புதுக்கவிதை 'சாரதீயம்' என்ற புதுச்சொல்லையும் படைக்கிறது. இதில் ஒன்றும் வியப்பு இல்லை. மரபினை உடைத்தெறிந்து, அள்ளித் தெளித்த கோலமெனக் கவிதை பாடுதலே புதுக் கவிகளின் பொழுதுபோக்கு. இற்றைய இலக்கிய உலகைப் பீடித்திருக்கும் இவ்வாடை கவிஞர் இளங்கம்பனைத் தொடர்ந்து தாக்காமல் இருக்க வேண்டும்.

(3) நூல்: தெய்வீக வாழ்வின் விஞ்ஞான ரகசியங்கள்

ஆசிரியர்: தெய்வீக விஞ்ஞானி சாது சு. ஸ்ரீனிவாஸ்:

வெளியீடு: இந்து சமயக் கல்லூரி

நாகுடி (அஞ்சல்) அறந்தாங்கி வட்டம்.

விலை: ரூபாய் ஐந்து

கடவுட் கொள்கையினையும், மறுபிறப்புண்மையினையும் மறுத்துப் பேசுவோர் நாத்திகர். ஆனால் தங்களைப் பகுத்தறிவுவாதிகள் என்று கூறிக்கொள்ளும் அவர்களின் ஏராளமான வினாக்களுக்கு விடை அளிக்கும் இந்நூலாசிரியர் டாக்டர் சாது. சீனிவாஸ் அவர்களின் உயரிய நோக்கமும், மதப்பற்றும், பெரிதும் பாராட்டத்தக்கன. தமது கருத்துகளைத் தெளிவுபடுத்தற்கு வினா-விடை முறையினை மேற்கொண்டதும் செவ்விதே. ஆயினும், சிற்சில விடைகளில் ஆசிரியரின் உணர்ச்சிவேகம்தான் வெளிப்படுகிறது. விஞ்ஞான ரீதியான தோற்றத்தைத் தரும் விடைகளே அதிகம். "ஆகர்ஷண சக்தியானது அறுநூற்றி இருபத்தி ஒன்பது கோடி ஆண்டுகளாகப் பூமியிலிருந்து வெளியாகி விடாமல் "காப்பவரே கடவுள்"; "பல ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு இக் காற்று மண்டலத்தைக் காப்பாற்றுவார்" எனும் விடைகளே இதற்குச் சான்று. கடவுளுண்மையினைப் பிரத்தியட்சமாகக் காட்டுதல் இயலாதெனவே ஆத்திகர்கள் தம் கூற்றை நிரூபிக்கத் தருக்கமுறையினை நாடுகின்றனர். டாக்டர் சாது அவர்கள் அம்முறையினைச் சில இடங்களிலாவது பின்பற்றியிருக்கலாம் என்று தோன்றுகிறது. கடவுள் எங்கு வசிக்கிறார்? அவருடைய விலாசம் என்ன? என்ற வினாவையும் எழுப்பியிருக்க வேண்டாம்; அதற்கு 148-ஆம் பக்கத்திய புனைந்துரை போன்ற விடையும் கொடுத்திருக்க வேண்டாம். அலைந்து திரியும் உள்ளத்தை ஒருமனப்படுத்துவதற்கே உருவ வழிபாடு என்பது ஒரு விளக்கம். ஆனால் "மந்திரங்கள் ஜெபிப்பதன் மூலம் ... கற்சிலைகளில் சேரும் மின்சக்தி அலைகள் தரிசிப்போருடைய உள்ளங்களில் பாய்ந்து" என்று ஆசிரியர் கூறும் விளக்கம் புதுமையாக இருக்கிறது. மழை பெய்ய-வேண்டும் என்பதற்காகப் பற்பல நாடுகளில் மேற்கொள்ளப்படும் பழக்க வழக்கங்களை ஆசிரியர் சுவைபடத் தொகுத்துள்ளார். 'உலகம் ஒரே குடும்பம்' என்னும் சிறு கட்டுரை உலக நாடுகள் அனைத்தும் ஆழ்ந்து சிந்திக்கத்தகும் ஒன்றாகும். கருத்து வேறுபாடுகள் உள்ளோரும் இந்நூலை ஒருமுறையாவது படித்துப் பார்த்தல் வேண்டும்.

—பழனி. அரங்கசாமி

செய்திக்கதிர்

பெரியார் நூற்றாண்டு விழா

தமிழகத்தில் தலைசிறந்த சமுதாயச் சீர்திருத்தப் பணியினை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் நடத்தி வெற்றி கண்ட பெருமை தந்தை பெரியாரைச் சாரும். பிராமணர்களின் சாதிவெறியினைக் கல்லிடைக்குறிச்சி குருகுலத்தில் நேரில் கண்டு மனம் கொதித்த பெரியார் 1925-இல் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினர். தனிநாடு கேட்டு அரசியலில் மீண்டும் நுழைந்தபோது, பெரியாரின் தலைமையில் 1944-இல் திராவிடர் கழகம் பிறந்தது. தன்னுடைய இறுதிமூச்சுவரை இக்கழகத்தைக் கட்டிக்காத்து, தீண்டாமை ஒழிப்புப்பணியினைத் திறம்பட நடத்தியவர் பெரியார்.

பெரியாரின் நூற்றாண்டு விழாவினைத் தமிழக அரசே ஏற்று நடத்தியது பாராட்டுதற்குரிய செயல். மதுரையில் நடந்த விழாவில் பெரியாரைப் பற்றிய ஆங்கில நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. அதனை எழுதிய செல்வி அனிதா டீல் சுவீடன் நாட்டைச் சார்ந்தவர். பெரியார் வாழ்ந்த காலத்தில் அவர் கருத்துகளை இருட்டடிப்புச் செய்து, வாய்ப்புக் கிடைத்தபோது கேலியும் கிண்டலும் பண்ணிய தமிழகத்தின் பற்பல வார மாத இதழ்கள் "அவர் தங்களுக்கு மிக நெருக்கமானவர் — பாராட்டத்தகுந்தவர்" என்ற செய்திகளையும், அட்டையில் அவர் படங்களையும் போட்டது குறிப்பிடத்தக்கது. கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களையும், கடவுட் கொள்கையினையும் முழுமூச்சோடு எதிர்த்த பெரியாரை அமெரிக்க நாட்டு இங்கர்சாலுக்கும், ஈழத்தைச் சேர்ந்த ஆபிரகாம் கோவூர் என்பாருக்கும் ஒப்பிட்டுச் சொல்லலாம். சென்னையில் உள்ள பெரியார் நிறுவனத்தினர் அவருடைய கட்டுரைகளைத் தொடர்ந்து நூல் வடிவில் வெளியிட்டு வருகின்றனர்.

ஈழத்தில் கடும் புயல்

சென்ற நவம்பர்த் திங்கள் கடைசி வாரத்தில் இலங்கையின் மேற்கு, கிழக்குப் பகுதிகளில் அடித்த கடும் புயலினால் எறத்தாழ எழரை இலட்சம் மக்கள் வீடிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். முன்னேஸ்வரம் என்ற இடத்தில் இருந்த இராமர் கோயில்

தண்ணீரில் மூழ்கி விட்டது. புயலினால் பாதிக்கப்பட்டோருக்கு மூன்று மாத காலத்திற்கு இலவசமாக உணவளிக்க ஈழநாட்டுக் குடியரசுத் தலைவர் செயவர்த்தன ஆணையிட்டுள்ளார். உணவுப் பொட்டலங்களைப் போடவும், செய்தித் தொடர்பினைச் சீர்படுத்தவும் இந்திய அரசு இரண்டு ஹெலிகாப்டர்களையும், ஒரு விமானத்தையும் உடனடியாக அனுப்பியுள்ளது. பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள உணவு, துணிமணிகள், மருந்துகள் ஆகியனவற்றை ஏற்றிக் கொண்டு நமது தமிழக அரசின் சார்பாக ஒரு கப்பலும் ஈழத்துக்குச் சென்றுள்ளது.

மூதறிஞர் இராசாசியின் நூற்றாண்டு விழா

இந்திய நாடெங்கணும் இராசாசியின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. ஆழ்ந்த மதிநுட்பமும், நேரிய நாட்டுப் பற்றும், நெஞ்சுரமும் கொண்ட அவர் 1952-ல் சென்னையில் முதன் மந்திரியாகப் பதவியேற்றபோது 'பொது உடைமைக் கட்சியினர் எனது முதல் எதிரி' என்று சொல்லிக் கொண்டே தமது உரையைத் துவக்கியது இன்றும் நினைவில் உள்ளது. அரசியல் தொண்டு மட்டுமன்றி அவர் புரிந்த இலக்கியப் பணியும் போற்றத்தகுந்ததே. திருக்குறளைத் தாம் சிறையிலிருந்த காலத்தில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்களை எளிய தமிழில் எழுதியுள்ளார். சிறிய கதைகள் மூலம் அரிய கருத்-துக்களை எளிமையாகத் தரும் திறமை வாய்ந்தவர். ஆயினும் அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளும், நூல்களும் கடினநடை வாய்ந்தவை. அவர் தமது கொள்கைப்பிடிப்பிலிருந்து சிறிதும் வழுவாதவர்; புகழை விரும்பாதவர். தமது வாழ்க்கை வரலாற்றைத் தாம் எழுதவில்லை என்பதோடு, பிறர் தம்மைப்பற்றி எழுதுவதையும் அவர் விரும்ப-வில்லை. மோனிகா பெல்டன் எனும் ஆங்கிலப் பெண்மணி அவருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அவரைப் பற்றிய நூல் ஒன்று எழுதியுள்ளார். இந்த அரசியல் மேதையின் நினைவால் நூலகம் ஒன்றும், கலைக்கழகம் ஒன்றும் நிறுவப்பட இருப்பது வரவேற்கத்-தக்கதாகும்.

பம்பாய் வடமொழிச் சங்கம்

டிசம்பர்த் திங்கள் இருபதாம் நாள் பம்பாயில் நடைபெற்ற வடமொழிச் சங்க விழாவிற்கு என். சி. கோரே தலைமையேற்றார். இவர் இங்கிலாந்தில் இந்தியத் தூதுவராகப் பணியாற்றுபவர்.

தமது தலைமையுரையில் 'வடமொழி எந்தக் காலத்திலும் மக்கள் பேசும் மொழியாக இருந்ததில்லை; எனினும் அதனை எளிமைப்படுத்திப் பார்க்க வேண்டும்' என்று குறிப்பிட்டார். விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று மத்திய அரசின் மும்மொழித் திட்டத்தை மாற்றி வடமொழியினையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது. மற்றொன்று டில்லியின் மக்களவை இந்திய மொழிகள் அனைத்தும் தங்கள் வரிவடிவத்தை நீக்கித் தேவநாகரி லிபியில் எழுதுமாறு சட்டம் இயற்ற வேண்டும் என்பதாகும். இஃது இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கும் என்பது அவர்கள் கருத்து.

ஆட்சிச்சொல் காவலர்: 80-ஆம் நாள் பிறந்தநாள் விழா:

ஆட்சிச் சொற் காவலர் உயர்பெருந் திருவினர் கீ. இராமலிங்கனார் அவர்களின் 80–ஆவது பிறந்த நாள் நவம்பர்த்திங்கள் முதல் வாரத்தில் சென்னையில் கொண்டாடப்பட்டது. ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் காஞ்சி, திருச்சி போன்ற நகரங்களில் நகராட்சி ஆணையராகப் பணியாற்றிய காலந்தொட்டு, ஆட்சித்துறையில் தமிழ்ச் சொற்களைப் பயில வேண்டும் என்று வற்புறுத்தி வந்ததோடன்றி, அதனைச் செயலிலும் நடத்திக் காட்டிய பெருமை அவர்கட்கே உரியது. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, சில ஆண்டுகள் தருமையாதீனத் தமிழ்க்கல்லூரியில் முதல்வராக பணியாற்றியவர். மறைந்த தமிழறிஞர் டாக்டர். மு. வரதராசனாரின் உற்ற நண்பராக விளங்கிய இவர்கள் திரு. வி. க. விடம் தமிழ்பயின்றவர்கள். சென்னையில் செனாய் நகரில் உள்ள இவர்கள் இல்லத்தின் பெயர் 'தமிழ் மணம்'. மதுரைப் பல்கலைக்கழக அஞ்சல்வழிக்கல்வியில் பி.ஏ பட்டம் பெற்றிருக்கும் இவர்தம் பேத்தியாருக்கு இவரிட்ட பெயர் தேனார்மொழி என்பதாகும். 'ஆட்சித்துறைத் தமிழ்', 'தமிழில் எழுதுவோம்' போன்ற நூல்களை எழுதிய இத் தமிழறிஞர், இன்றும் சென்னையில் தலைமைச் செயலகத்தில் அரசு அலுவலர்கட்கு ஆட்சி மொழித்தமிழ் பற்றிச் செயல் விளக்க விரிவுரையாற்றி வருகிறார்கள். அவர்களின் தமிழ்ப்பணி நீடிக்கும் வண்ணம் இறைவன் நீண்ட ஆயுளைக் கொடுக்குமாறு வாழ்த்தி வணங்குகிறோம்.

இலக்கியத்துக்கான நோபில் பரிசு :

போலந்து நாட்டைச் சார்ந்த யூத எழுத்தாளரான ஐசக் சிங்கர் இந்த ஆண்டின் இலக்கியத்துக்கான நோபில் பரிசைப் பெற்றுள்ளார். 1935 - ஆம் ஆண்டிலிருந்து இவர் அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறார். ஆங்கில நாவலாசிரியர் கிரகாம் கிரீன் இப்பரிசினைப் பெற்று விடுவார் என்றே பரவலாகக் கூறப்பட்டு வந்தது இந்த ஆண்டும் அந்த நம்பிக்கை பொய்த்து விட்டது இந்தியநாட்டைப் பொறுத்த வரையில், இலக்கியத்துக்கான நோபில் பரிசினை வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூர் தமது 'கீதாஞ்சலி' என்ற நூலுக்காகப் பெற்றார். பௌதீக நுண்ணறிவிற்காக சர். சி. வி. இராமனும் அப்பரிசைப் பெற்ற பின்னர், நோபில் பரிசு இன்னும் இந்தியாவை எட்டிப் பார்க்கவில்லை.

திருச்சியில் வைர விழா :

நவம்பர்த் திங்கள் இரண்டாம் வாரம் தொடங்கித் திருச்சி நகரின் பல்வேறிடங்களில் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா சிறப்புற நடைபெற்றது. கி. ஆ. பெ. அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட தமிழகப் புலவர் குழுவினர், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் ஒன்றை வெளியிடுவதற்கு ஆவன செய்து வருகின்றனர். இது பாராட்டுதற்குரிய செய்தியாகும். இலக்கியம், மருத்துவம் போன்ற துறைகளில் சிறு சிறு நூல்கள் வெளியிட்டு அருந்தொண்டாற்றி வரும் இப் பெருந்தகையார் 'ஆகாசவாணி' என்ற சொல்லை 'வானொலி' என்று மாற்றச் செய்வதற்குப் பெரும் போராட்டம் செய்தவர். முப்பதாண்டுகளுக்கு முன்னர் 'தமிழர் நாடு' என்ற ஓர் இலக்கிய இதழை நடத்தியவர். இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்று முடிந்த பின்னர், அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த வெளி நாட்டு அன்பர்களைத் தமிழ்நாடெங்கணும் அழைத்துச் செல்லும் பெரும்பணியினைத் தமிழக அரசு இவரிடம் ஒப்படைத்தது. அயராது தமிழ்ப்பணி செய்யும் இப்பெரியார் நெடிதே வாழ வாழ்த்துகிறோம்.

இந்தித் திணிப்பு :

இந்தியநாடு விடுதலை பெற்று முப்பதாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. மறைமுகமாகவும், நேரடியாகவும் மத்திய அரசினர் இந்தியினைத் திணிப்பதும் நின்றபாடில்லை. இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலமும் நீடிக்கும் என்று நேருவும், லால்பகதூர்

சாத்திரியும் கொடுத்த வாக்குறுதிகளைப் பற்றி அரசினர் எந்த அக்கறையும் எடுத்துக் கொள்ளவில்லை. எனவேதான் டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. மாநாடு 'இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம்' என்ற நிலையினின்றும் மாறி, ''இந்தியையே எதிர்க்கிறோம்'' என்கின்ற அளவிற்குத் தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. இந்தி மொழியினை நம்நாட்டில் பெரும்பாலோர் பேசுகின்றனர் என்னும் அரசினரின் கூற்றுத் தவறானது என்று புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டினார் முரசொலிமாறன்.

அரசினரின் மக்கள் தொகைக் கணக்குப்படி இந்திமொழி பேசுவோரின் எண்ணிக்கை வருமாறு:

1951 —	நூற்றுக்கு	42	பேர்
1961 —	”	30.4	பேர்
1971 —	”	28	பேர்

அரசினரின் கணக்குப்படியே தேய்ந்து வருகிற இந்தியை மட்டும் அரியணை ஏற்றிவிட வேண்டும் என்று அரசினர் எண்ணினால் அது பகற்கனவாகவே முடியும். எனவே அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் பதினான்கு மொழிகளையும் ஆட்சிமொழியாக்குவது பற்றி அரசினர் விரைவாகச் சிந்தித்துச் செயற்படுதல் நன்று.

உலகத் தமிழ் மாநாடு

''ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு 1980-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மதுரை மாநகரில் நடைபெறும்'' என்று தமிழகச் செய்தித் துறை அமைச்சர் அறிவித்துள்ளார். கோலாலம்பூர், சென்னை, பாரிஸ், கொழும்பு ஆகிய இடங்களில் இதுவரை நான்கு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. 1968-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா தமிழக முதல்வராக இருந்தபோது இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் சிறப்புற நடைபெற்றது. சங்கம் வைத்து மொழி வளர்த்த மாமதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடக்கவிருப்பது முற்றும் பொருத்தமான நிகழ்ச்சியாகும். ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான செனகல் குடியரசு இந்த மாநாட்டை நடத்த விரும்பியதாகவும், பின்னர் மதுரை மாநரில் நடத்துவதென்றே முடிவாகி உள்ளதென்றும் தெரிகிறது.

"செந்தமிழ்"

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியது
இம்மலர்.

ஆண்டுச் சந்தா ரூ. 5—00

புலவர்கள் பலர் எழுதிய அரிய கட்டுரைகள்,
ஆய்வுரைகள் கொண்ட பழைய "செந்தமிழ்"
இதழ்கள் ஆண்டு வாரியாக பைண்டு
செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் விலை தனித்தனி ரூ. 5—00

*

தேவைக்கு:

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 1.

என்ற முகவரிக்கு எழுதவும்.

மணியம் பிரஸ், 44-பி, வெங்கிடபதி அய்யங்கார் தெரு, மதுரை-9.